# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 154 சுபகிருது வருடம், தை மாதம் 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (24.01.2023) ஹிஜ்ரி 1444, ஜமா அதுல் ரஜப் - 01, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.60


## கமெண்ட் கந்தர்...

அரசியல் தலைவர்களிலயும் தேர்தலை விரும்புற, வெறுக்கிற ஆக்கள் இருக்கிறதுபோல



தேர்தல் ஆணைக் குழுவிலயும் தேர்தலை விரும்புற, வெறுக்கிற ஆக்கள் இருக்கிறாங்கள் போல என்னங்கோ..!



## உஷ்

ஜீவன் தொண்டமானுக்கும், பவித்ரா வன்னியாராச்சிக்கும் அமைச்சுப்பதவிகள் வழங்கியதால் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினர் அதிருப்தியடைந்ததையடுத்து இன்னும் சில தினங்களில் மேலும் பலருக்கு அமைச்சுப் பொறுப்புகளை வழங்க தீர்மானித்துள்ளாராம் ஜனாதிபதி ரணில்.

ஒருவர், இருவர் என்று படிப்படியாக இந்த பொறுப்புகள் வழங்கப்பட்டால் அது பெரிதாக கண்ணைக் குத்தாது என்று நினைக்கிறாராம் ரணில்.




நீதித்துறை அடக்குமுறைக்கு எதிராக கறுப்பு அங்கிப் போராட்டம் என்ற கோஷத்தின் அடிப்படையில் சட்டத்தரணிகள் குழுவொன்று நேற்று (23) அளுத்கடை நீதிமன்றத்திற்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டத்தை நடத்தியது. ( படப்பிடிப்பு - ஏஷான் தசநாயக்க )

# தேர்தல் திகதி வர்த்தமானி இழுபறியில்!

(நமது அரசியல் செய்தியாளர் )

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மார்ச் மாதம் 9ஆம் திகதி நடைபெறுமென அறிவிக்கப்பட்டபோதிலும் அது தொடர்பான அதற்கான வர்த்தமானி அறிவித்தல் இன்னும் வெளியிடப்படவில்லை. அதனை வெளியிடுவதில் இழுபறி நிலைமை இருப்பதாக உயர்மட்ட தகவல்கள் நேற்றிரவு 'தமிழன்' செய்திகளிடம் தெரிவித்தன.

தேர்தல் திகதியை ஊடகங்கள் ஊடாக அறிவிப்பதற்கப்பால் வர்த்தமானி மூலம் அறிவிப்பதே சட்டமாகும்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்புமனுக்களைக் கோரும் வர்த்தமானியில் தேர்தல் ஆணைக் குழுவில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் ஐந்து பேரின் பெயர்களும் குறிப்பிடப்பட்டுள்ளதால், தேர்தலுக்கான திகதியை நிர்ணயம் செய்வதற்கும் அவ்வாறான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் உள்ளது.

தேர்தல் திகதியை தீர்மானித்தல் போன்ற முக்கிய தேர்தல் பணிக்கு முழு ஆணைக்குழுவின் ஒப்புதல் தேவையாகும்.

02 பக்கம்



## பிள்ளைகளின் எதிர்காலத்தை இருளில் மூழ்கடிக்கும் மின்வெட்டை நிறுத்துக!

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அரசிடம் கோரிக்கை

02 பக்கம்

## பொதுப் பயன்பாடு ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு அச்சுறுத்தல்!

விசாரணை நடத்துமாறு பாதுகாப்பமைச்சிடம் கோரிக்கை

சிவில் சமூக செயற்பாட்டாளர்களென தம்மை அடையாளப்படுத்திக் கொண்ட நபர்கள் சிலர் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அமைந்துள்ள கட்டடத்திற்குள் எவ்வாறு நுழைந்தார்கள் என்பது பற்றியும், அந்தச் சந்தர்ப்பத்தில் தாம் அங்கு இருப்பதை ...

02 பக்கம்

## அரசியலமைப்புப் பேரவை நாளை புதன்கிழமை கூடும்

அரசியலமைப்புப் பேரவையின் கூட்டம் நாளை புதன்கிழமை (25) மு.ப 9.30 மணிக்கு நடைபெறவிருப்பதாக பதவியணித் தலைமை அதிகாரியும், பாராளுமன்றப் பிரதிச் செயலாளர் நாயகமுமான குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

அத்துடன், சபாநாயகர், பிரதமர் மற்றும் பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரின் இணக்கப்பாட்டுடன் சபாநாயகரினால் பெயர் குறிப்பிடப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லாத நபர்களை அரசியலமைப்புப் பேரவையின் உறுப்பினர்களாக நியமிப்பதற்கான நியமனம் அண்மையில் ஜனாதிபதியால் வழங்கப்பட்டது.

இதன்படி கலாநிதி பிரதாப் இராமானுஜம்,

02 பக்கம்



## லிட்ரோ எரிவாயு விலை அதிகரிக்கும் சாத்தியம்

02 பக்கம்

## இலங்கை உள்விவகாரங்களில் இந்தியத் தலையீடு; சூழ்ச்சிகளுக்கு எதிராக மக்கள் ஒன்றுபட வேண்டும்

சரத் வீரசேகர பகிரங்க கோரிக்கை



அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தினூடாக இந்தியா, இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடுவதாகவும் பொருளாதார நெடுக்கடி நிலைமை மற்றும் நாட்டுக்கு எதிராக இடம்பெற்றுவரும் சூழ்ச்சிகளுக்கு எதிராக மக்கள் ஒன்றுபட வேண்டும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

02 பக்கம்

## அரசாங்கத்தின் வரிக்கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தொழிற்சங்க ஒன்றிய கறுப்பு வாரம் நேற்று ஆரம்பம்

(நா.தினுஷா )

மருந்து தட்டுப்பாடு, வாழ்வாதார செலவு அதிகரிப்பு மற்றும் அரசாங்கத்தின் தவறான வரிக்கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தொழில் நிபுணர்களின் தொழிற்சங்க ஒன்றியத்தினால் அறிவிக்கப்பட்டிருந்த கறுப்பு வாரம் நேற்று (23) ஆரம்பமாகியது.

மருந்து தட்டுப்பாட்டின் காரணமாக நோயாளர்கள் நெருக்கடிக்குள்ளாகியுள்ளதாகவும் தங்கி சிகிச்சை பெறுபவர்கள் மருந்து தட்டுப்பாட்டின் காரணமாக போதிய சிகிச்சையின்றி நீண்ட நாட்கள் வைத்தியசாலைகளில் தங்கியிருக்க நேர்ந்துள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், கொழும்பு தேசிய வைத்தியசாலை உள்ளிட்ட பல்வேறு வைத்தியசாலைகளில் சேவையாற்றும் கனிஷ்ட சேவைப்பிரிவினர்...

02 பக்கம்

## சீனாவின் டீசலை விநியோகிக்க 122 மில்லியன் ரூபா செலவாகும்

விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர



சீன அரசாங்கத்தால் நாட்டின் விவசாயிகளுக்காக வழங்கப்பட்ட டீசல் தொகையை விநியோகிப்பதற்கு சுமார் 122 மில்லியன் ரூபா செலவாகுமென எதிர்பார்ப்பதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

குறித்த டீசல் தொகை நாடளாவிய ரீதியில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் பௌசர் மூலம் விநியோகிக்கப்படுவதாக அமைச்சர் தெரிவித்தார்.

அரை ஏக்கர் முதல் இரண்டரை ஏக்கர் வரை நெற்செய்கையில் ஈடுபடும்...

02 பக்கம்

## புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் இந்த வாரம்

"2022ஆம் ஆண்டுக்கான தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் வெளியிடப்படும்" என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எச்.ஜே.எம்.சி.அமித் ஜயசுந்தர தெரிவித்தார்.

பரீட்சைக்கான விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் பணிகள் தற்போது இடம்பெற்று வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

சமூக வலைத்தளங்களில் பரப்பப்படும் பொய்யான...

02 பக்கம்

## சுதந்திர தின மேடைத் தூண்களுக்கு கறுப்புப் பட்டி கட்டிய ஹிருணிக்கா

நாட்டில் மக்கள் தீராத பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துவரும் நிலையில், 200 மில்லியன் ரூபாவை செலவிட்டு சுதந்திர தின வைபவத்தை நடத்துவது எந்த விதத்தில் நியாயமாகும்? - என ஹிருணிக்கா பிரேமச்சந்திர கேள்வியெழுப்பியுள்ளார்.

சுதந்திர தின விழா ஏற்பாடுகள் நடைபெறும் காலிமுகத்திடலுக்குச் சென்ற ஹிருணிக்கா, அரசாங்கம் திருடர்களுடன் சேர்ந்து சுதந்திர தினத்தை கொண்டாடுகிறது.



02 பக்கம்

## அரசு ஊழியர்களுக்கான சம்பளத் திகதி அறிவிப்பு

அரச ஊழியர்களின் ஜனவரி மாத சம்பளத்திற்கான திகதிகள் குறித்த அறிவிப்பை இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய வெளியிட்டுள்ளார்.

இதன்படி, ஊழியர்களுக்கான சம்பளம் நாளை 25ஆம் திகதி வழங்கப்படும் என இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று ...

02 பக்கம்

## தொழிலாளர் சந்தைக்கு ஏற்ற வகையில் தரமான பணியாளர்களைப் பெற்றுக்கொடுக்க ஆலோசனை

கோபா உப குழு கவனம்



வெளிநாட்டு தொழிலாளர் சந்தைக்கு தரமான தொழிலாளர்களை வழங்கும் நோக்கத்துடன் தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கான ஒருங்கிணைந்த திட்டத்தை தயாரிப்பதில் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் (கோபா) உபகுழு கவனம் செலுத்தியது.

தரம் மற்றும் திறமையான புலம்பெயர்ந்த தொழிலாளர்களை வெளிநாட்டு வேலைகளுக்கு பரிந்துரைப்பது, அது சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பாக அமைச்சுகளுக்கிடையிலான குழுவால் தயாரிக்கப்பட்ட பயிற்சித் திட்டத்தை...

02 பக்கம்

## சர்வகட்சி கூட்டம் வியாழனன்று

சர்வகட்சி கூட்டமொன்றை எதிர்வரும் வியாழனன்று நடத்துவதற்கு நேற்று மாலை கூடிய அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

02 பக்கம்

## தேர்தல் செலவு சட்டமூலம் விரைவில் சட்டமா அதிபருக்கு

02 பக்கம்

## தேர்தல் செலவு...

தேர்தல் செலவு ஒழுங்குபடுத்தல் சட்டமூலம் இவ்வாரம் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக அறியமுடிகின்றது.

வேட்பாளர்களின் தேர்தல் செலவை கட்டுப்படுத்துவதற்காக விதிமுறைகள் மற்றும் தேர்தல் செலவு ஒழுங்குபடுத்தல் சட்ட மூலத்தின் திருத்தங்களை உள்ளடக்கி முறையாக தயாரிப்பதற்காக சட்டமா அதிபர் மற்றும் சட்ட வரைபுகள் திணைக்களத்துக்கு தேர்தல் செலவு ஒழுங்குபடுத்தல் சட்டமூலம் அனுப்பிவைக்கப்படவுள்ளது.

இந்த வாரத்துக்குள் சபாநாயகர் கைச்சாத்திட்டு அதனை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுப்பாரென தெரிகிறது.

தேர்தல் செலவு ஒழுங்குபடுத்தல் சட்டமூலம் கடந்த வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் நிறைவேறியபோதிலும் அந்த சட்டமூலத்தில் சபாநாயகர் கையொப்பம் இடப்பட்ட பின்னரே அது சட்டமாக அமுலாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

## புலமைப்பரிசில்...

செய்திகளை மக்கள் நம்ப வேண்டாம் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

## சர்வகட்சி கூட்டம்...

தமிழ்க்கட்சிகளுடன் இதுவரை நடத்திய பேச்சுகள் குறித்து இந்த கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விளக்குவாரென தெரிவிக்கப்படுகிறது.

## சீனாவின் டீசலை...

அனைத்து விவசாயிகளுக்கும் பயிரிடப்பட்ட தொகைக்கு ஏற்ப இலவசமாக எரிபொருள் வழங்கப்படவுள்ளது.

அதற்கமைய, இரண்டரை ஏக்கர் நிலத்தில் நெற்செய்கை மேற்கொண்டுள்ள விவசாயி ஒருவருக்கு 15 லீற்றர் டீசல் வழங்கப்படவுள்ளது.

## அரச ஊழியர்களுக்கான...

அதிகாரிகளுக்கான சம்பளம் நாளை அல்லது எதிர்வரும் 26ஆம் திகதி வழங்கப்படுமெனவும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## தேர்தல் திகதி...

அதனால் தேர்தல் திகதி வர்த்தமானியில் அறிவிக்கப்படாமைக்கு ஆணைக்குழுவுக்குள் ஒருமித்த கருத்து இல்லையா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

இந்த பின்னணியில் நாளை புதன்கிழமை (25) அரசியலமைப்பு பேரவைக் கூட்டம் நடைபெறவுள்ளது. அதற்கு முன்னர் தேர்தல் திகதி கொண்ட வர்த்தமானி அறிவித்தல் கண்டிப்பாக வெளியிடப்பட வேண்டுமென சட்ட நிபுணர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## இலங்கை உள்விவகாரங்களில்...

நிகழ்வொன்றில் கலந்துகொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை தற்போது நடத்துவதற்கு, நாட்டின் பொறுப்புடைய பிரஜை மற்றும் அரசியல்வாதியாக நான் விரும்பவில்லை. நாட்டு மக்கள் பொருளாதார நெருக்கடியை சந்தித்திருக்கும் நிலையில், இது தேர்தல் நடத்துவதற்கான காலகட்டமில்லை.

எரியும் நெருப்பில் பீடியை பற்றவைக்கச் செல்வது போன்று, தமிழ் அமைப்புகள் ஒன்றிணைந்து 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை நடைமுறைப்படுத்த முயற்சிக்கிறார்கள்.

இந்தியாவின் வெளிநாட்டு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் இங்கு வருகை தந்திருந்தபோது, 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை அமுல்படுத்த வேண்டும் என்று அறிவித்திருந்தார்.

இது எமது நாட்டின் உள்விவகாரத்தில் தலையிடும் வகையிலான விடயமாகும். இது தொடர்பில் இருக்கும் மக்களின் நிலைப்பாடு, தேர்தல் காலகட்டத்தில் இவ்வாறான கருத்துகள் வேறு திசைக்கு திரும்பக்கூடும். நாட்டிலுள்ள பொருளாதார நெருக்கடியை போன்று நாட்டுக்கு எதிராக இருக்கம் சூழ்ச்சிகளிலிருந்தும் பாதுகாக்க மக்கள் ஒன்றுபட வேண்டும். அதுபோன்று, வாக்கெடுப்பு நிலையங்களுக்கு வந்து மக்கள் வாக்களிப்பார்கள் என்றும் நான் நம்பவில்லை என்றார்.

## சுதந்திர தின மேடை...

இதற்கு மக்கள் எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும் என தெரிவித்து மேடைத் தூண்களுக்கு கறுப்புப்பட்டி கட்டி தனது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளார்.

இதனிடையே, எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்ட இடத்திற்கு வந்த பொலிஸார், எதிர்ப்பில் ஈடுபட்டவர்களை அங்கிருந்து கலைந்து செல்லுமாறு தெரிவித்தனர். ''நாட்டில் குழந்தைகளுக்கு உணவில்லை! பாடசாலை செல்ல வழியில்லை! மக்களுக்கு எந்த நிவாரணத்தையும் வழங்காத அரசாங்கம் சுதந்திர தின கொண்டாட்டத்திற்கு ஒதுக்கியுள்ளது. நாட்டின் மக்கள் துன்பப்படும் நிலையில் ரூ. 200 மில்லியன் செலவில் சுதந்திர தினக் கொண்டாட்டம் தேவையா?'' போன்ற கோஷங்கள் அங்கு எழுப்பப்பட்டன.

## லிட்ரோ...

பெப்ரவரி மாதம் முதல் வாரத்தில் லிட்ரோ எரிவாயுவின் விலை 500 ரூபாவிற்கு மேல் அதிகரிக்குமென லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

12.5 கிலோ கிராம் லிட்ரோ எரிவாயு சிலிண்டரின் விலை 500 முதல் 750 ரூபா வரை அதிகரிக்கப்படும் என்றும், 5 கிலோ மற்றும் 2.3 கிலோகிராம் சிலிண்டர்களின் விலையும் இந்த விலை உயர்வுக்கு ஏற்ப அதிகரிக்கும் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இந்த விலை அதிகரிப்பு எதிர்வரும் 5ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் என்று தெரிவித்த அதிகாரி, உலக சந்தையில் எரிவாயுவின் விலை அதிகரிப்பே விலை அதிகரிப்புக்கு காரணம் எனவும் தெரிவித்துள்ளார்.

## தொழிலாளர் சந்தைக்கு...

மீளாய்வு செய்வதற்கான அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் உபகுழு அதன் தலைவர் வைத்தியகலாநிதி சுதர்ஷனி பெர்னாந்துபுள்ளே தலைமையில் அண்மையில் (19) பாராளுமன்றத்தில் கூடியபோதே இது பற்றிக் கவனம் செலுத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, கல்வி அமைச்சு, தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு, சுகாதார அமைச்சு மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சு ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தி அரசாங்க அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

வெளிநாட்டுத் தொழிலாளர் சந்தையை நோக்காகக் கொண்டு தரமான பயிற்சிகளை வழங்குவதற்கு இதில் சம்பந்தப்பட்ட அனைத்து அமைச்சுகளும் இணைந்து திட்டமொன்றைத் தயாரிக்குமாறு உபகுழு இதற்கு முன்னர் வழங்கிய பரிந்துரையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் தொடர்பில் இங்கு கவனம் செலுத்தப்பட்டது. வெளிநாட்டுக்குச் செல்லும் பணியாளர்களுக்கான பயிற்சிகளை தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் ஏற்கனவே தயாரித்து முன்னெடுத்து வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இது தொடர்பான பயிற்சிகளும் பிரசாரங்களும் ஏற்கனவே கிராம மட்டத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்த அதிகாரிகள் மேலும் சுட்டிக்காட்டினர்.

தேசிய தொழில் தகுதிச் சான்றிதழை (NVQ) மற்ற நாடுகளுடன் சீரமைப்பது குறித்து ஆய்வு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களின் அனுமதிப்பத்திரங்களை கடுமையாக கண்காணிப்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

வெளிநாடு செல்ல விரும்பும் பயிற்சி பெற்ற தொழிலாளர்களின் ஒழுக்கம் குறித்தும் குழு கலந்துரையாடியது.

வெளிநாட்டுக்குச் செல்லும் பணியாளர்களுக்குத் தேவையான பயிற்சிகளைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பில் பாராளுமன்றத்தின் ஒத்துழைப்பை இந்த உபகுழுவின் தலையீட்டுடன் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பதாகப் பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியகலாநிதி சுதர்ஷனி பெர்னாந்துபுள்ளே தெரிவித்தார். இதற்கான நடவடிக்கைகள் விரைவில் முன்னெடுக்கப்பட வேண்டும் என அவர் மேலும் வலியுறுத்தினார்.

# சவூதி அரேபியாவிற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்ட அமைச்சர் சப்ரி

வெளிவிவகார அமைச்சர், ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு சவூதி அரேபியாவிற்கு நேற்று (23) பயணமானார்.

சவூதி அரேபிய வெளிவிவகார அமைச்சரின் அழைப்பையடுத்தே இந்த விஜயத்தை அவர் மேற்கொண்டுள்ளார்.

வெளிவிவகார அமைச்சரின் சவூதி அரேபிய பயணம் எதிர்வரும் 27ஆம் திகதியுடன் நிறைவடைகின்றது.

சவூதி அரேபியாவில் தங்கியிருக்கும் காலத்தில் இஸ்லாமிய அபிவிருத்தி வங்கி, இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு, வளைகுடா ஒத்துழைப்புப் பேரவை ஆகியவற்றின் சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் புனித மக்கா, மதீனா நகரங்களின் ஆளுநர்கள் ஆகியோருடன் வெளிவிவகார அமைச்சர் கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளார்.





நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் நிர்வாக சபையினர் மற்றும் ஊழியர்களின் முயற்சியால் மேற்கொள்ளப்பட்ட நெற்பயிர்ச் செய்கையின் நெல் புதிர் எடுப்பு நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.

## அரசியலமைப்புப் பேரவை...

வைத்திய கலாநிதி தில்குஷி அனுலா விஜேசுந்தர, கலாநிதி வெலிகம விதான ஆராச்சிகே தினேஷா சமரரத்ன ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கலாநிதி இராமானுஜம் அரச சேவைகள் ஆணைக்குழுவின் உறுப்பினராக செயற்பட்டிருப்பதுடன், ஒரு தசாப்தத்துக்கு மேலாக பல அமைச்சுகளின் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார். தில்குஷி அனுலா விஜேசுந்தர துறைசார் வைத்தியநிபுணராவார். கலாநிதி தினேஷா சமரரத்ன கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணியாற்றுகிறார்.







பதுளை மாவட்ட சர்வமத செயற்குழுக்கூட்டம், பதுளை கிராண்ட் ரெஜன்சி விடுதியில் சர்வமத செயற்குழு இணைப்பாளர் ஆர். ஸ்ரீகாந்தன் தலைமையில் நடைபெற்றது. அது தொடர்பான படங்களை இங்கு காணலாம்.
(பதுளை நிருபர் )

# புதிய ஆண்டுக்கான பாடப்புத்தகங்களை கொள்வனவு செய்ய அமைச்சரவை ஒப்புதல்

2023ஆம் ஆண்டு புதிய பாடசாலை தவணைக்காக மாணவர்களுக்கு இலவச பாடப்புத்தகங்களை வழங்குவது தொடர்பான கொள்வனவு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

45% பாடப்புத்தகங்கள் அரச அச்சகங்களிலும், 55 வீத பாடப்புத்தகங்கள் தனியார் அச்சக நிறுவனங்களிலும் அச்சடிக்கப்படும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி தகுதிவாய்ந்த 22 தனியார் அச்சக நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்தியக் கடன் உதவியின் கீழ் பெறப்பட்ட காகிதத்தின் முதல் கையிருப்பையும் அரச அச்சுகங்கள் பெற்றுள்ளன. தொடர்ந்து பாடநூல் அச்சிடும் பணி நடைபெற்று வருகிறது.

மேலும், கல்வி அமைச்சர் ஒப்பந்தத் தொகையில் 20 சதவீதத்தை தனியார் அச்சக நிறுவனங்களுக்கு முற்பணமாக வழங்க அமைச்சரவையின் ஒப்புதலைப் பெற்றுள்ளார்.

2022ஆம் ஆண்டிற்கான ஏற்பாட்டின் மூலம் கோரப்பட்ட அச்சகங்களுக்கு இந்த முற்பணத்தில் சுமார் 50 வீதத்தை வழங்க கல்வி வெளியீடுகள் துறை நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி, கல்வி அமைச்சு ஏற்கனவே பல தனியார் அச்சகங்களில் இருந்து அச்சிடப்பட்ட பாடப்புத்தகங்களைப் பெற்றுள்ளதுடன், மேலும் இதுபோன்ற பாடப்புத்தகங்கள் பெறப்படும் நிலையில் உள்ளன.

எஞ்சிய முற்பணங்களுக்கு திறைசேரியிடம் பணம் கோரப்பட்டிருந்த நிலையில், கல்வி அமைச்சரின் தலையீட்டின் பின்னர் அதில் ஒரு பகுதியை வழங்க திறைசேரி ஒப்புக்கொண்டுள்ளது.

அதன்படி, வரும் வாரத்தில், அச்சகங்கள் சமர்ப்பித்த பில்களுக்கும், முற்பணத்தில் இருந்து அச்சகங்களுக்கு செலுத்த மீதமுள்ள பகுதிக்கும் பணம் விடுவிக்கப்படும்.

## பொதுப்பயன்பாடு...

எவ்வாறு அறிந்து கொண்டார்கள் என்பது பற்றியும் ஆராயுமாறு ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் இருவர் நிதி மற்றும் பாதுகாப்பு அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பிரதி தலைவர் உதேனி விக்கிரமசிங்க மற்றும் அதன் உறுப்பினரான பேராசிரியர் மொஹான் சமரநாயக்க ஆகியோரே இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் என தம்மை அடையாளப்படுத்திக் கொண்ட சிலர், தமக்கு அச்சுறுத்தல் விடுத்ததாக பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் குறித்த உறுப்பினர்கள் கடந்த 22ஆம் திகதி கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளித்துள்ளனர்.

கொள்ளுபிட்டி - சென் மைக்கல் வீதியில் உள்ள இந்த கட்டடத்திற்குள் நுழைந்த சிலர் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு எடுத்த தீர்மானம் தொடர்பில் விசாரித்து அச்சுறுத்தியதாகவும், அந்த சந்தர்ப்பத்தில் ஊடகவியலாளர்கள் சிலரும் சம்பவ இடத்தில் காணப்பட்டதோடு, அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதை அவர்களும் அறிவர் என்று பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

அன்று நாம் அங்கு வருகை தந்திருக்கின்றோம் என்பதை ஆணைக்குழுவின் தலைவர் உள்ளிட்ட அதிகாரிகள் சிலர் மாத்திரமே அறிவர். இந்த தகவலை சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் எனக் கூறிக் கொள்ளும் அவர்கள் எவ்வாறு அறிவார்கள் என்றும், ஊடகங்களையும் அழைத்துக் கொண்டு அவர்கள் ஆணைக்குழுவிற்கு வருகை தந்தது எவ்வாறு என்பது தொடர்பிலும் துரிதமாக கண்டறியப்பட வேண்டும் என்றும் அவர்கள் தமது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளனர்.

ஆணைக்குழுவின் குழுவொன்று மக்களைத் தூண்டிவிட்டு அவர்களின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வேலைத்திட்டத்தில் ஈடுபடுவதாக சந்தேகம் எழுந்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். எனவே, இது குறித்து உடனடியாக விசாரணை நடத்துமாறு பொலிஸாரிடமும் நிதியமைச்சிடமும் இரு உறுப்பினர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## அரசாங்கத்தின்...

நேற்று காலை 8.00 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை சேவையிலிருந்து நீங்கி, வைத்தியசாலைகளின் முன்னால் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டிருந்தனர்.

இதேவேளை, நேற்று கறுப்பு வாரத்தை முன்னிட்டு பொதுமக்களின் கையொப்பம் பெறும் நடவடிக்கைகள் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினால் கொழும்பு தேசிய மருத்துவமனையில் ஆரம்பிக்கப்பட்டிருநத்து. மேலும் வைத்தியர்கள் கைகளில் கறுப்புப் பட்டி அணிந்து சேவையில் ஈடுபட்டிருந்ததும் மருத்துவமனைகளின் முன்னால் கறுப்பு கொடிகளும் பறக்கவிடப்பட்டிருந்தன.

மருந்து தட்டுப்பாடு, மருந்துகளுக்கான விலை அதிகரிப்பு, வங்குரோத்து, நாட்டில் இடம் பெறும் இலஞ்ச ஊழல்களுக்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்த கறுப்பு வாரத்தை அனுஷ்டிக்க நடவடிக்கை எடுத்திருக்கிறோம். இன்று முதல் (நேற்று) மக்கள் கையொப்பம் பெறும் செயற்பாடுகள் நாட்டிலுள்ள சகல மருத்துவமனைகளிலும் முன்னெடுக்கப்படுமென்று அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித்த அளுத்கே தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

வைத்தியசாலைகளிலுள்ள நோயாளர் சிகிச்சைப் பிரிவு, வெளிநோயாளர் பிரிவு என எந்தப் பிரிவுக்கு சென்றாலும் நோயாளர்களின் கண்ணீரையே பார்க்கிறோம். வைத்தியர்களாகிய நாங்களும் இன்று கண்ணீர் வெளியிடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். இந்த வாரம் முழுவதும் கறுப்புப் பட்டி அணிந்தே எங்களின் கடமைகளை முன்னெடுப்போம். மருத்துவமனைகளில் கறுப்புக் கொடிகளும் பறக்கவிடப்படும்.

வைத்தியசாலைகளிலுள்ள நோயாளர் சிகிச்சைப் பிரிவு, வெளிநோயாளர் பிரிவு என எந்தப் பிரிவுக்கு சென்றாலும் நோயாளர்களின் கண்ணீரையே பார்க்கிறோம். வைத்தியர்களாகிய நாங்களும் இன்று கண்ணீர் வெளியிடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். தற்போது நாட்டில் இருக்கும் நெருக்கடி நிலைமையினால் மக்களே நெருக்கடிக்குள்ளாகின்றார்கள்.

நீரிழிவு நோய்க்கான மருந்துகூட தேசிய மருத்துவமனையில் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. கடுமையான நெருக்கடி நிலைமையை சந்தித்துள்ளோம். இதற்கு தீர்வுக் காண்பதற்காக 10 யோசனைகளை முன்வைத்திருந்தோம். இந்த யோசனைகளை முன்வைத்து 6 மாதங்களாகின்றன. ஆனால், இந்த யோசனைகளை ஒரு யோசனையைக் கூட அமுல்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முயற்சிக்கவில்லை. தொடர்ந்து அதிகாரிகள் இவ்வாறு செயற்படுவார்களானால் மருத்துவ அதிகாரிகள் சங்கம் என்ற அடிப்படையில் இந்த பிரச்சினையை சர்வதேச மட்டத்துக்கு எடுத்துச்செல்ல எதிர்பார்த்திருக்கிறோம். தற்போது வரையில் உலக சுகாதார ஸ்தாபனத்துக்கு முன்வைப்பதற்கான முறைப்பாடொன்றையும் தயாரித்திருக்கிறோம் என்றார்.

வங்கி ஊழியர்களின் தொழிற்சங்கம் உள்ளிட்ட பல்வேறு தொழிற்சங்கங்கள் நேற்று கறுப்பு ஆடை அணிந்து அரசாங்கத்தின் வரிக் கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## பிள்ளைகளின் எதிர்காலத்தை...

இலட்சக்கணக்கான பிள்ளைகளின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் முக்கியமான உயர்தரப் பரீட்சையின் போது கூட மின்சாரம் வழங்க முடியாத அரசாங்கம் எவ்வளவு மக்கள் விரோத அரசாங்கமாக உள்ளது என்பதை நாங்கள் புரிந்து கொள்ளலாம்.

இவ்வாறு, எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். அறிக்கையொன்றில் அவர் கூறியுள்ளதாவது ,

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை நடைபெறும் ஆரம்ப நாளிலும் மின்சாரத்தை துண்டிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அரசாங்கத்தின் இயல்பை நாம் புரிந்து கொண்டதன் காரணமாகவே அரசாங்கம் இப்படிப்பட்ட தன்னிச்சையான மற்றும் இரக்கமற்ற முடிவை எடுத்ததில் ஆச்சரியப்படவில்லை என்பதற்கு காரணமாகும்.

தொடர்ந்து மின்சாரத்தை வழங்குவதென்றால் மின் கட்டணத்தை அதிகரிக்க வேண்டும் என அமைச்சர் தெரிவித்த போதிலும், அது பொறுப்பைத் தட்டிக்கழிப்பதற்கான காரணமாக அமையாது என்பதோடு,

இலட்சக்கணக்கான பிள்ளைகளின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் முக்கியமான உயர்தரப் பரீட்சையின் போது கூட மின்சாரம் வழங்க முடியாத அரசாங்கம் எவ்வளவு மக்கள் விரோத அரசாங்கமாக உள்ளது என்பதை நாங்கள் புரிந்து கொள்ளலாம்.

முன்னெப்போதையும் விட இவ்வருடம் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கு பிள்ளைகள் தோற்றுகின்றனர் என்பது இரகசியமல்ல. அவர்களின் எதிர்காலமும் போலவே நாட்டின் எதிர்காலமும் சவாலான சூழ்நிலையை எதிர்கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் இப்பிள்ளைகள் இவ்வாறு பரீட்சைக்குத் தோற்றுகின்றனர். ஒருபுறம், நாடு பொருளாதார ரீதியில் மிகவும் வங்குரோத்து நிலைக்குச் சென்றுள்ளதோடு, மறுபுறம் இந்த பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளும் பாரிய சவால்களை எதிர்கொண்டுள்ளன.

2009ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 30ஆம் பிரிவின் பிரகாரம், இலங்கை மின்சார சபை (விநியோக உரிமதாரர்) 2022 ஆம் ஆண்டிற்கான 82 வீத கட்டண அதிகரிப்புக்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் ஒப்புதலை கோரியது. இத்துடன் நின்றுவிடாது பல முறை மின் கட்டணம் பெருமளவு அதிகரிக்கப்பட்டது.

வாழ்வின் ஆயிரமாயிரம் சிரமங்களுக்கு மத்தியிலும், வாழ்க்கைப் போக்கை பற்றிக்கொண்டிருக்கும் நாட்டு மக்களின் மூச்சை இறுக்காமல், சலுகை முறையொன்றைத் தயாரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றாலும், இது குறித்து அரசாங்கம் அக்கறை கொள்வதாக இல்லை.

மின்சக்தியை விற்கும் அதன் மறைமுக நிகழ்ச்சி நிரலின் பிரகாரம், அரசாங்கத்தின் கூட்டு நாடகம் வெளிவருவது மீண்டும் மீண்டும் நிரூபணமாகிறது. உயர்தரப் பரீட்சையின் போதும் மின்சாரத்தை துண்டித்து அரசாங்கம் எதிர்பார்ப்பது அதன் நோக்கிலாகவும் இருக்கலாம்.

வாழ்வாதார நெருக்கடியில் மூழ்கிக் கிடக்கும் மக்களுக்கு மின் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளதோடு, உயர்தரப் பரீட்சைக்கு முகம்கொடுக்கும் பிள்ளைகளின் எதிர்காலத்தை இருளில் மூழ்கடிக்கும் வகையில், பரீட்சை நாட்களிலும் மின்சாரத்தை துண்டிக்க தீர்மானம் எடுக்கப்படுவதில் நாட்டின் எதிர்காலம் இருளில் மூழ்கியுள்ளது.

எனவே, இந்த வெட்கக்கேடான முடிவை அரசாங்கம் உடனடியாக மீளப் பெற்று, தொடர்ச்சியாக மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்துகிறோம்.

அது அவ்வாறு இடம் பெறாவிட்டால், இதற்கு எதிரான மக்கள் சாபத்தில் இருந்து அரசாங்கம் தப்ப முடியாது என்பதையும் சுட்டிக்காட்டுகிறோம்.

## தினசரி பலாபலன்கள்

**சுபகிருது வருடம் தை மாதம்
10ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**

**மேஷம்:** எதிர்பாராத பண வரவு மகிழ்ச்சியைக் கொடுக்கும், போட்டிப் பந்தயங்களில் வெற்றிவாகை சூடுவீர்கள்.

**ரிஷபம்:** உறவினர்கள் உதவிக்கரம் நீட்டுவார்கள். மற்றவர்கள் உங்களுக்கு பணிந்து நடந்து கொள்வார்கள்.

**மிதுனம்:** உடல் உழைப்பு அதிகமாக இருக்கும் நாள். வயிறு தொடர்பான நோயால் அவதி ஏற்படும்.

**கடகம்:** வீண் குழப்பங்களால் மனம் தளர்வடையும். கோபத்தை குறைத்துக் கொள்ளுங்கள்.

**சிம்மம்:** புகழ், செல்வாக்கு அனைத்தும் சிறப்பாக அமையும். திடீர் பயணத்தால் நன்மைகள் உண்டு.

**கன்னி:** எதிரிகளை வெற்றி கொள்வீர்கள். தொழில் முன்னேற்றம், பண இலாபங்கள் உண்டு.

**துலாம்:** உடல்நலத்தை பார்த்துக்கொள்ளுங்கள். அதிர்ஷ்டத்தை சோதித்து அவஸ்தைக்குள்ளாகாதீர்கள்.

**விருச்சகம்:** வாகனங்களில் அசட்டையாக பயணிக்காதீர்கள். குடும்ப உறவு திருப்திகரமாக இருக்கும்.

**தனுசு:** முயற்சிகளில் வெற்றி மேல் வெற்றி உண்டு. இன்றைய தேவைக்குரிய பணம் நிச்சயம் கிடைக்கும்.

**மகரம்:** வீட்டுத் தேவைக்காக செலவுகள் ஏற்படும். குடும்ப உறவுகளோடு சற்று நிதானமாக உரையாடுங்கள்.

**கும்பம்:** ஏதாவது நடந்துவிடுமோ என்ற அச்சத்தில் இருப்பீர்கள். தேவையற்றவர்களின் பிரச்சினைகளில் தலையிடாதீர்கள்.

**மீனம்:** ஆணவத்தால் அவமானம் ஏற்படும். உணவு, தூக்கமில்லாமல் சற்று அவதிப்படுவீர்கள்.

| | |
|---|---|
| திதி | : திரிதியை பி.ப 3.22 வரை பின் சதுர்த்தி (தேய்பிறை). |
| நட்சத்திரம் | : சதயம் இரவு 9.57 வரை பின் பூரட்டாதி. |
| யோகம் | : மரண யோகம் (சுப காரியம் கூடாது.) |
| வார சூலை | : மேற்குத்திசை நோக்கி சுப காரியம் கூடாது. |
| நல்ல நேரம் | : மு.ப. 8.33 – 9.33 மணிவரை |
| ராகு காலம் | : 3.33 – 5.03 மணிவரை |
| எமகண்டம் | : 9.33 – 11.03 மணிவரை |
| குளிகை | : 12.33 – 2.03 மணிவரை |
| சந்திராஷ்டமம் | : கடக ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும். |

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739



நீதிபதி வேட்டை, சட்டத்தரணிகள் அடக்குமுறைக்கு எதிராக 'கறுப்பு அங்கிப் போராட்டம்' என்ற கோஷத்தின் அடிப்படையில் சட்டத்தரணிகள் குழுவொன்று நேற்று (23) அளுத்கடை நீதிமன்றத்திற்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டத்தை நடத்தியது. இதன்போது சட்டத்தரணிகள் அளுத்கடை நீதிமன்ற வளாகத்தைச் சுற்றி ஊர்வலமாகச் சென்று நீதிமன்றங்களுக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# கோழி - முட்டை உற்பத்திக் கைத்தொழிலின் முன்னேற்றத்திற்காக அனைத்துத் தரப்பினரும் கூட்டு இணக்கத்திற்கு வருவது அவசியம்

## உணவுப் பாதுகாப்பு தொடர்பான கூட்டத்தில் வலியுறுத்தல்

கோழி இறைச்சி மற்றும் முட்டை உற்பத்திக் கைத்தொழிலின் முன்னேற்றத்திற்காக அனைத்து தரப்பினரும் கூட்டு இணக்கப்பாட்டுக்கு வர வேண்டியதன் அவசியம் குறித்து வலியுறுத்தப்பட்டது.

கோழி இறைச்சி மற்றும் முட்டை உற்பத்திக் கைத்தொழிலில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல், நேற்று (23) முற்பகல் உணவுப் பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி சுரேன் பட்டகொடவின் தலைமையில் ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்றது. இதன்போது இந்த விடயம் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

கோழிப்பண்ணை மற்றும் முட்டை உற்பத்திக் கைத்தொழிலில் ஈடுபடுவோர் மற்றும் துறைசார் நிறுவனங்களின் அதிகாரிகள் கலந்துகொண்ட இக்கலந்துரையாடலில் கால்நடை தீவனத் தட்டுப்பாடு, மூலப்பொருட்களின் விலையேற்றம், எரிபொருள் நெருக்கடி, போக்குவரத்துப் பிரச்சினைகள், இறக்குமதி செய்யப்படும் கால்நடைத் தீவனங்களுக்கான அந்நிய செலாவணி பிரச்சினைகள் முதலியன மற்றும் அவற்றுக்கான தீர்வுகள் குறித்து அவதானம் செலுத்தப்பட்டது.

இக்கைத்தொழிலிலுடன் தொடர்புள்ள சகல தரப்பினரும் கூட்டு இணக்கப்பாட்டுக்கு வருவதன் மூலம் தொழில்துறையில் உள்ள பெரும்பாலான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியுமென சுட்டிக்காட்டிய கலாநிதி சுரேன் படகொட, அந்த நிலைமையின் கீழ் முட்டை மற்றும் கோழி இறைச்சி உற்பத்திகளின் விலைகளை நிர்ணயிக்க வாய்ப்பு ஏற்படும் எனவும் சுட்டிக்காட்டினார்.

கோழி இறைச்சி மற்றும் முட்டை உற்பத்திக் கைத்தொழிலை ஏற்றுமதி கைத்தொழிலாக மாற்றுவது ஜனாதிபதியின் எதிர்பார்ப்பு எனக் குறிப்பிட்ட அவர், அதற்காக கூட்டு இணக்கப்பாட்டுக்கு வருவதன் மூலம் தொழில்துறையில் ஈடுபடும் அனைவரும் அதன் முன்னேற்றத்திற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவார்கள் என ஜனாதிபதி எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

முட்டை வர்த்தக சங்கத் தலைவர், சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத் தலைவர், அகில இலங்கை முட்டை உற்பத்தி சங்கத் தலைவர் மற்றும் தேசிய விவசாயிகள் அமைப்பின் தலைவர் ஆகியோர் இத்தொழிலில் உள்ள பிரச்சினைகள் மற்றும் வழங்கக்கூடிய தீர்வுகள் தொடர்பான ஆலோசனைகளையும் முன்வைத்தனர்.

கோழிப்பண்ணை மற்றும் முட்டை உற்பத்தித்துறையின் முன்னேற்றத்துக்காக கூட்டு இணக்கப்பாடு ஒன்றை எட்டுவதற்கு முன்வந்தமை விசேட அம்சமாகும். அத்தோடு தொழில் பாதுகாப்புக்காக ஜனாதிபதி அலுவலகம் மேற்கொண்டு வரும் தலையீடு அனைவராலும் பாராட்டப்பட்டது.

விவசாய அமைச்சின் செயலாளர் குணதாச சமரசிங்க, வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஏ.எம்.பி.எம்.பி. அத்தபத்து மற்றும் துறைசார் நிறுவனங்களின் அதிகாரிகள் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

## தினேஷ் ஷாப்டரின் மரணத்திற்கான காரணத்தை நீதிமன்றம் இன்னும் தீர்மானிக்கவில்லை - நீதவான்



பிரபல வர்த்தகர் தினேஷ் ஷாப்டர் மரணமடைந்த சம்பவம் தொடர்பான நீதவான் விசாரணையின் சாட்சி விசாரணைகளை சம்பந்தப்பட்ட தரப்பினர் விடுத்த கோரிக்கைக்கு அமையவே தமது உத்தியோகபூர்வ அறைக்குள் நடத்த தீர்மானித்ததாக கொழும்பு மேலதிக நீதவான் ரஜிந்ரா ஜயசூரிய நேற்று பகிரங்க நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

தினேஷ் ஷாப்டர் மரணம் சம்பந்தமான வழக்கு நேற்று கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதே நீதவான் இவ்வாறு கூறியுள்ளார்.

மரணம் சம்பந்தமான பல்வேறு தகவல்கள் ஊடகங்களில் வெளியாகியிருப்பதால், மரண விசாரணையின் சாட்சி விசாரணைகளை பகிரங்கமற்ற வகையில் நடத்துமாறு உயிரிழந்தவரின் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

அத்துடன் தினேஷ் ஷாப்டரின் மரணம் தொடர்பான விசாரணைகள் சம்பந்தப்பட்ட அரச இரசாயன பகுப்பாய்வு அறிக்கை கிடைத்துள்ளது.

எனினும், மரணத்திற்கான காரணம் தொடர்பில் நீதிமன்றம் இன்னும் முடிவுக்கு வரவில்லை எனவும் நீதவான் கூறியுள்ளார்.

இதனையடுத்து மரண விசாரணைகள் சம்பந்தமான சாட்சி விசாரணைகள் நீதவானின் உத்தியோகபூர்வ அறையில் இடம்பெற்றன.

தினேஷ் ஷாப்டரின் சகோதரரின் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மரணம் சம்பந்தமான வழக்கின் மேலதிக விசாரணை எதிர்வரும் 8 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## தங்காலை சுற்றுலா விடுதியில் இளைஞனும் யுவதியும் தற்கொலை

தங்காலையில் உள்ள சுற்றுலா விடுதி ஒன்றில் மர்மமான முறையில் உயிரிழந்த யுவதி மற்றும் இளைஞனின் உடல்களை மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். அதே சுற்றுலா விடுதியில் தொழில் புரிந்து வந்த இளைஞனும் அம்பலாந்தோட்டை பிரதேசத்தை சேர்ந்த யுவதி ஆகியோரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இவர்கள் இருவருக்குமிடையில் காதல் தொடர்பு இருந்திருக்கலாம் எனக் கூறப்படுகிறது. இளைஞன் சிறு வயது முதல் குறித்த சுற்றுலா விடுதியில் வளர்ந்து வந்துள்ளதுடன், பின்னர் விடுதியை நிர்வகித்து வந்துள்ளார்.

இந்த இளைஞன் நேற்று முன்தினம் இரவு அம்பலாந்தோட்டை பிரதேசத்திற்கு முச்சக்கரவண்டியில் சென்று உயிரிழந்துள்ள யுவதியை விடுதிக்கு அழைத்து வந்துள்ளதாக ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதன் பின்னர் இவர்கள் இருவரும் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டிக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. எவ்வாறாயினும், இச்சம்பவம் குறித்து தங்காலை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வீசப்படும் குப்பைகளில் இருந்து கரிம உரங்கள்

### வர்த்தகர்கள் குழுவொன்று தம்புள்ளையில் ஆராய்வு



தம்புள்ளையில் வீசப்படும் குப்பைகளில் இருந்து கரிம உரங்களை உற்பத்தி செய்யும் முறை குறித்து ஆராய்வதற்காக இந்தியா மற்றும் டுபாயில் இருந்து வர்த்தகர்கள் குழுவொன்று தம்புள்ளைக்கு வந்தது.

இந்திய, டுபாய் நிறுவனங்களின் ஒழுங்குபடுத்தும் திட்டமாக 5 ஏக்கரில் தம்புள்ளை மாநகர சபையால் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள கரிம உரத்திட்டம் மற்றும் தம்புள்ளையில் ஆரம்பிக்கப்பட்ட பாண்டா மூங்கில் செய்கையை இந்தக் குழு பார்வையிட்டது.

இந்தியாவின் ஹைதராபாத்தில் வசிக்கும் பிரபல தொழிலதிபர் ராம் சுப்ரமணியன் மற்றும் டுபாயைச் சேர்ந்த இரண்டு தொழிலதிபர்களான அகமது அல் அலி மற்றும் முகமது ஜாபர் ஆகியோர் இந்தப் பயணத்தை மேற்கொண்டனர்.

பின்னர் தம்புள்ளை உயன்வத்த புராண ரஜமஹா விகாரையில் அமைந்துள்ள ஸ்ரீ ஜினரதன சிறுவர் இல்லத்திலுள்ள சிறு பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்கிய இக்குழுவினர் உயன்வத்த புராண ரஜமஹா விகாரையில் இயங்கி வரும் புதிய துறவிப் பயிற்சி நிறுவனத்திற்கும் நிதியுதவிகளை வழங்கினர்.

ரங்கிரி தம்புலு ரஜமஹா விஹாரையின் பேமரத்தன தேரர் டுபாய் நாட்டு வர்த்தகர்களுக்கு பிரித் ஓதியதுடன், பிரித் நூல்களையும் கட்டிவிட்டமை இங்கு விசேட அம்சமாகும்.



தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

**2023, ஜனவரி 24ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை**

# பீபா சம்மேளனம் விதித்த தடையும் இலங்கைக்கு ஏற்பட்ட அவமானமும்!

சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனம் இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் (ஃபிஃபா) உறுப்புரிமையை தற்காலிகமாக இரத்து செய்துள்ளதாக வெளிவந்துள்ள செய்தி விளையாட்டு ரசிகர்களுக்கு அதிர்ச்சியைத் தருவதாக இருக்கிறது.

கடந்த ஜனவரி 21ஆம் திகதிமுதல் மறு அறிவிப்பு வரும்வரை இந்தத் தடை அமுலில் இருக்குமென அந்த சம்மேளனம் தெரிவித்துள்ளது.

சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனம், இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் முன்னாள் பொதுச் செயலாளர் உபாலி ஹேவகேவுக்கு கடிதம் மூலம் இந்தத் தடை குறித்து அறிவித்துள்ளது.

கடந்த ஜனவரி மாதம் 14ஆம் திகதி நடைபெற்ற உத்தியோகபூர்வ தேர்தலில் இலங்கை கால்பந்து சம்மேளனத்திற்கு புதிய அதிகாரிகள் சபை நியமிக்கப்பட்டபோதிலும், சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனம் புதிய அதிகாரிகள் சபையை ஏற்றுக்கொள்ளாததால், முன்னாள் பொதுச் செயலாளரின் பெயருக்கு குறித்த கடிதத்தை அனுப்பியுள்ளது.

அண்மையில் நடைபெற்ற அலுவலகத் தேர்தலில் விளையாட்டுத்துறை அமைச்சர் மூன்றாம் தரப்பாக தலையிட்டமை, விளையாட்டு அமைச்சால் வாக்குறுதியளிக்கப்பட்ட இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் அரசியலமைப்பில் திருத்தம் மேற்கொள்ளாமை மற்றும் சர்வதேச கால்பந்து சம்மேளனத்துடன் முன்னர் இணங்கிய விதிகளுக்கமைய செயற்படாமை போன்ற காரணங்களால் இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தடையின்படி, இலங்கை மற்றும் இலங்கை தேசிய அணியை பிரதிநிதித்துவப்படுத்தும் எந்த வீரரும், பயிற்றுவிப்பாளரும் அல்லது அதிகாரியும் சர்வதேச போட்டிகளிலோ அல்லது வேறு எந்தப் போட்டிகளிலோ பங்கேற்க முடியாது.

இந்தத் தடை குறித்து விமர்சனங்கள் எழலாம். கால்பந்தாட்ட அணி இலங்கையில் பெரிய உத்வேகமில்லையே? அதற்கு தடைகளை இட்டால் என்ன? இடாவிட்டால் என்ன? என்ற கேள்விகள் எழலாம். ஆனால், அதுவல்ல விடயம்.இந்த இடைக்காலத் தடையை வழங்கியுள்ள அமைப்பு சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு அமைப்பு. அதுவும் உலகில் அதிகளவினரால் பார்த்து ரசிக்கப்படும் விளையாட்டான கால்பந்து விளையாட்டின் தலைமைப்பீடம். அதனால் இலங்கைக்கு உலகளவில் ஏற்பட்ட அவமானம் இது.

இலங்கை கால்பந்து சம்மேளனத்தில் அரசியலை புகுத்தி தனது சொந்த அடிவருடிகளை புகுத்தி இப்போது நீதிமன்றம் வரை விடயத்தை இழுத்துவிட்டிருக்கும் விளையாட்டுத்துறை அமைச்சரே இதற்கான முழுப்பொறுப்பையும் ஏற்கவேண்டும். தகுதியானவர்கள் தகுதியான இடங்களுக்கு நியமிக்கப்படுவதில்லை என்ற இலங்கையின் அந்த சராசரி சம்பிரதாய கோட்பாடுகளுக்கமைய இலங்கையின் கால்பந்து சம்மேளனத் தேர்தலிலும் அமைச்சரின் அழுத்தங்கள் இருந்ததால் இன்று நிலைமை இந்தளவு தீவிரமடைந்திருக்கிறது.

இலங்கையின் விளையாட்டுத்துறை இந்தளவு சீர்கெட்டுள்ளமைக்கு அரசியல் பின்னணிகளும், அரசியல் அழுத்தங்களுமே காரணம். கால்பந்து மட்டுமல்ல. கிரிக்கெட் உட்பட்ட இதர விளையாட்டு நிர்வாக செயற்பாடுகளில் அரசியல் ஒன்றோடொன்று கலந்திருப்பதால் உண்மையான, திறமையான நிர்வாகத்திற்கோ அல்லது சிறந்த வீரர்களை உள்வாங்கவோ அவற்றில் இடமில்லை. கிரிக்கெட் வீரர் ஒருவர் பாலியல் சர்ச்சையில் சிக்கியதும், விளையாட்டு அணிகள் பல வெற்றிக்கிண்ணங்களை இழந்து வருவதும் இதன் அடிப்படையில்தான்.

இவ்வாறாக, இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் மீதான பீபாவின் தடை தொடர்பில், அதனால் ஏற்பட்டுள்ள களங்கத்தை நிவர்த்திசெய்ய அரசாங்கம் என்ன விதமான நடவடிக்கைகளை எடுக்கப்போகிறது? இப்போது நீதிமன்றத்தின் கீழ் வந்துள்ள விடயத்தை விளையாட்டுத்துறை அமைச்சு அப்படியே நீதித்துறை முடிவுக்கு விட்டுவிடுமா அல்லது நீதித்துறை தீர்ப்பின் பின்னர் மீண்டும் அரசியல் சித்துவிளையாட்டுகளை புகுத்தி குழப்பத்தை ஏற்படுத்துமா? கால்பந்து சம்மேளனத் தலைவராக தெரிவு செய்யப்படும் ஒருவருக்கு குறைந்தபட்சம் கால்பந்து சம்பந்தமான தொடர்புகள், அறிவுகள் இல்லையெனில், அது கல்வித் தகைமை இல்லாத ஒருவருக்கு கல்வியமைச்சை வழங்கியமைக்கு சமன் ஆகாதா? இந்த இலேசான விடயமே துறைசார்ந்த அமைச்சருக்கோ அல்லது அரச நிர்வாகிகளுக்கோ விளங்கவில்லையெனில் விளையாட்டுத்துறையை இவர்கள் எவ்வாறு நவீன யுகத்திற்கேற்ப வடிவமைக்கப்போகிறார்கள்?

சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் இலங்கை மீதான தடை அரசுக்கோ அல்லது விளையாட்டுத்துறை அமைச்சுக்கோ இலேசான விடயமாக இருக்கலாம். ஆனால், அதனோடு சேர்த்து நாட்டின் மானமும் கப்பலேறியிருக்கிறது என்பதை அவர்கள் புரிந்துகொள்ளவேண்டும். அதற்கான ஞானத்தை எல்லாம் வல்ல இறைவன் அவர்களுக்கு வழங்க வேண்டும்.

## இன்றைய நாளில்...

- 1897 – சுவாமி விவேகானந்தர் சிக்காகோவிலிருந்து நாடு திரும்பும் வழியில் யாழ்ப்பாணம் வருகை தந்தார். யாழ். இந்துக் கல்லூரியில் அவருக்கு பெரும் வரவேற்பளிக்கப்பட்டது.
- 1908 – பேடன் பவல் இங்கிலாந்தில் முதலாவது சிறுவர் சாரணப் பிரிவை ஆரம்பித்தார்.
- 1939 – சிலியில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் 28 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.
- 1978 – கொஸ்மஸ் - 954 என்ற சோவியத் செயற்கைக்கோள் பூமியின் வளிமண்டலத்தினுள் எரிந்து, அதன் பகுதிகள் கனடாவின் வடமேற்குப் பிரதேசத்தில் வீழ்ந்தன.
- 1984 – முதலாவது எப்பிள் மக்கின்டொஷ் தனி மேசைக் கணினி அமெரிக்காவில் விற்பனைக்கு வந்தது.
- 1986 – வொயேஜர் - 2 விண்கலம் யுரேனஸின் 81 ஆயிரத்து 500 கி.மீ. தூரத்துக்குள் வந்தது.
- 1990 – ஜப்பான் 'ஐட்டென்' என்ற தனது முதலாவது நிலவுச் சலாகையை ஏவியது.
- 2006 – இலங்கை ஊடகவியலாளர் சுப்பிரமணியம் சுகிர்தராஜன் திருலையில் ஆளுநர் செயலகத்திற்கு அருகாமையில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.
- 2009 – இலங்கை ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட அரச தலைவர் தேர்தலுக்கு இரு நாட்களுக்கு முன்னர் கொழும்பில் காணாமல்போனார். இவர் கொல்லப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

# உண்மைக்குரல் ஒடுக்கப்பட்ட தினம் இன்று!





## சுகிர்தராஜன் படுகொலை செய்யப்பட்ட - பிரகீத் காணாமலாக்கப்பட்ட நாள் இன்று

இலங்கையில் கடுமையாக நிலவிய கருத்துச் சுதந்திரப் படுகொலையை நினைவுபடுத்தும் நாள் இன்றாகும்.

இதேபோல் ஒரு நாளில் ஊடகவியலாளர் சுகிர்தராஜன் கொல்லப்பட்டதுடன், ஊடகவியலாளர் பிரகீத் காணாமலாக்கப்பட்டார். இலங்கையில் நிலவிய கடுமையான ஊடக சுதந்திர மறுப்பை வெளிப்படுத்தும் இந்த இரு நிகழ்வுகளும் சர்வதேச ரீதியில் கவனம் பெற்றவையாகும்.

**ஐந்து மாணவர்கள் படுகொலையின் சாட்சி சுகிர்தராஜன்**

சுப்பிரமணியம் சுகிர்தராஜன் (டிசம்பர் 12, 1969 – ஜனவரி 24, 2006) இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர். எஸ்.எஸ்.ஆர். என அழைக்கப்பட்டவர். சுடர் ஒளி பத்திரிகையில் ஊடகவியலாளராகப் பணியாற்றி வந்தவர். ஈழப் போர்க்காலத்தில் இவர் திருக்கோணமலையில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.

திருகோணமலை நகரின் போர்ச்சூழலிலிருந்து பல செய்தி நிறுவனங்களுக்கு செய்திகளை வழங்கி வந்தார். சுடரொளி, உதயன் ஆகிய பத்திரிகைகளின் திருமலை நிருபராகக் கடமையாற்றிய சுகிர்தராஜன், வீரகேசரி, மெட்ரோ நியூஸ் ஆகியவற்றில் அரசியல் கட்டுரைகள் எழுதிவந்தார்.

சுகிர்தராஜன் மட்டு. குறுமண்வெளியில் பிறந்தார். தந்தை சுப்பிரமணியம். தாய் அருள் ஞானம்மா. இவர் தனது ஆரம்பக் கல்வியை மட்டு. குறுமண்வெளி சிவசக்தி வித்தியாலயத்திலும், உயர்கல்வியை மட்டு. இந்துக் கல்லூரி மற்றும் மட்டு. மத்திய கல்லூரி என்பவற்றிலும் பயின்றார். பாண்டிருப்பு கதிர்ப்பு கலை இலக்கிய வட்டத்தின் ஸ்தாபகத் தலைவரான இவர், 1997 இல் இலங்கைத் துறைமுக அதிகாரசபையில் எழுத்தளராகப் பணியில் சேர்ந்தார்.

2006 ஜனவரி 24இல் சுகிர்தராஜன் திருமலையில் ஆளுநர் செயலகத்திற்கு அருகாமையில் சுட்டுக் கொல்லப்பட்டார். ஐந்து மாணவர்கள் படுகொலை தொடர்பிலான ஆதாரங்களை நிழற்படங்களாக இவர் முன்னர் வெளியிட்டிருந்தார்.

இப்படுகொலை குறித்து எவ்வித விசாரணைகளும் இடம்பெறவில்லை. திருமணமான இவருக்கு இரு பிள்ளைகள் இருந்தனர்.

**தமிழருக்காக குரல் கொடுத்த சிங்கள ஊடகவியலாளர்**

பிரகீத் எக்னலிகொட இலங்கையின் ஊடகவியலாளரும், கேலிச்சித்திர ஓவியருமாவார். சுதந்திர ஊடக அமைப்பைச் சேர்ந்த இவர் லங்கா நியூஸ்.கொம் இணையத்தளத்தின் ஊடகவியலாளராகப் பணியாற்றியவர்.

இவர் இலங்கை ஜனாதிபதித் தேர்தலுக்கு இரு நாட்களுக்கு முன், 2010, ஜனவரி 24ஆம் திகதி இரவு 8.30 மணியளவில் கொஸ்வத்தையில் காணாமல் போனதாக முறையிடப்பட்டது. இவர் இலங்கை அரசு சார்பானவர்களால் கடத்தப்பட்டதாக அவரது குடும்பத்தினர் முறைப்பாடுகளை மேற்கொண்டனர்.

இரு பிள்ளைகளின் தந்தையான பிரகீத் முன்னொரு தடவையும் கடத்தப்பட்டு விசாரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டார். முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை மையப்படுத்தி 'போர் ஒன்றை வெற்றிகொள்வதற்கான இரகசியங்கள்' என்ற 40 நிமிட நேர ஆவணத் திரைப்படத்தைத் தயாரித்தவர்களில் இவரும் ஒருவர்.

எக்னலிகொட காணாமல்போன நிகழ்வை விளக்கி சர்வதேச மன்னிப்புச் சபைஅறிக்கை வெளியிட்டுள்ளது. எல்லைகளற்ற செய்தியாளர்கள் என்ற அமைப்பும் இவரைப்பற்றித் தனது கரிசனையை வெளிப்படுத்தியுள்ளது.

கொழும்பு குற்றப்பதிவுத் திணைக்களம் எக்னலிகொட காணாமல்போனமை குறித்து விசாரணைகளை மேற்கொண்டிருந்தது. ஆனாலும் இவர் இதுவரையில் கண்டுபிடிக்கப்படவில்லை.

# முன்னாள் எம்.பி. வி.தர்மலிங்கத்தின் சிலை திறப்பு







சுன்னாகம் வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் ஏற்பாட்டில் முன்னாள் உடுவில் கிராம சபைத் தலைவரும், இலங்கை தமிழரசுக் கட்சியின் பிரமுகருமான மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர் விஸ்வநாதர் தர்மலிங்கத்தின் திருவுருவசிலை திறப்பு நிகழ்வு நேற்று சுன்னாகம் வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்கு அருகாமையில் திறந்துவைக்கப்பட்டது.

சுன்னாகம் வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் கருணாகரன் தர்ஷன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா ஆகியோர் கலந்துகொண்டு சிலையை திறந்துவைத்தனர்.

இதில் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் சோ.மாவை சேனாதிராஜா, யாழ். தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் ஆறுதிருமுருகன், முன்னாள் மாகாண சபையின் உறுப்பினர் பா.கஜதீபன், சுன்னாகம் வலிகாமம் தெற்கு பிரதேச சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர்.

# கூட்டமைப்பின் பிளவு மக்களிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. தெரிவிப்பு

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கூட்டமைப்பிலிருந்து தமிழரசுக் கட்சி தனித்துப் போட்டியிடுவது என்பது ஆரோக்கியமான விடயமல்ல. கூட்டமைப்பின் பிளவு மக்கள் மத்தியில் தற்போது பாரியதொரு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு அனைவரும் ஒற்றுமையாக செயல்பட வேண்டும் என்றும் அதன் மூலமாகவே மக்களுக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்க முடியும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

தமிழ் மக்களின் பிரச்சினைகள், அரசியல் தீர்வு, காணாமல் போனவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுக்கொடுப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூட்டாக பல்வேறு உறுதிமொழிகளை மக்களுக்கு வழங்கியது.

மக்கள் மத்தியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் என்று நம்பியிருந்தார்கள். தற்போது கூட்டமைப்பே பிளவுபட்டு காணப்படுகிறது.



இது மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

காரணம், தமிழரசுக் கட்சி என்பது ஒரு தாய்க்கட்சியாகும். கட்சி இது தொடர்பில் உணர்ந்து செயற்பட்டிருக்க வேண்டும். மக்கள் எங்களை நம்பியிருக்கிறார்கள்.

சிறியதொரு தேர்தல் ஒன்றுக்காக அவர்கள் பிரிந்து செல்வது என்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது.

மக்களின் நம்பிக்கையை தமிழரசுக் கட்சி இல்லாது செய்துள்ளது. மக்களை புறக்கணித்து பிரிந்து செயற்படுவது தவறானதாகும்.

கூட்டமைப்பிலிருந்து விலகி தனித்துப் போட்டியிடும்போது எங்களுக்குள் கருத்து முரண்பாடுகள் உருவாகலாம்.

பிரசாரக் கூட்டங்களின்போது வேட்பாளர்கள் வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்காக கூட்டமைப்பை விமர்சித்துப் பேசலாம்.

இவ்வாறு நடக்கும்போது மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தும். வெறுப்பு நிலையை உருவாக்கும். அது மக்களின் கோபத்தைத் தூண்டும் செயற்பாடாக அமையும்.

இருப்பினும், எதிர்காலத்தில் மக்கள் மத்தியில் வாக்கு கேட்டு செல்லும்போது சம்பந்தனையோ அல்லது சுமந்திரனையோ விமர்சித்து வாக்குகளைக் கேட்கப்போவதில்லை. தனிப்பட்ட நபரை வைத்து அரசியலில் நடத்தவேண்டிய தேவை எமக்கு கிடையாது.

மேலும் மக்களின் நலனை அடிப்படையாகக்கொண்டு செயல்படுவோம். மக்களின் திருப்தியை பெற்று, அவர்களுக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதே எங்களுடைய இலக்காகும்.

ஒருவேளை, தேர்தல் நிறுத்தப்பட்டால் எங்களுடைய நிலை என்ன? அதன் பின் ஏற்படக்கூடிய சிக்கல்களுக்கு எவ்வாறு முகங்கொடுப்பது என்பதை சிந்திக்கவில்லை. நாம் ஒற்றுமையாக பயணிப்பதன் மூலமே பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும். தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு அனைவரும் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும்.

மேலும் எங்களுடைய எந்தவொரு அரசியல் பயணத்திலும் இந்தியாவின் மத்தியஸ்தம் தேவைப்படுகிறது.

இந்தியாவை நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இலங்கையில் காணப்படும் இனப்பிரச்சினை மற்றும் எங்களுடைய மக்களுக்கு இடம்பெறுகின்ற அநீதிகளை உடனடியாக தட்டிக்கேட்கின்ற செயற்பாடுகளாக இருக்கட்டும்... அனைத்திலும் இந்தியாவின் தலையீடு எமக்குத் தேவைப்படுகிறது. அதனூடாக எங்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுக்கொள்ளலாம் - என்றார்.

### நக்கல் நமசிவாயம்

**ரோட்டில போற நேரம் யார் மேலயாவது உரசினால் கூட அவரும் வேட்பாளராத்தான் இருக்கிறார்... பாருங்கோவன் நிலைமைய..!**



# அரசாங்கத்தின் புதிய வரிக் கொள்கைக்கு எதிராக துறைமுக தொழிற்சங்கங்கள் நேற்று ஆர்ப்பாட்டம்




படப்பிடிப்பு : சமன் அபேசிறிவர்தன

அரசாங்கத்தின் புதிய வரிக் கொள்கைக்கு எதிராக துறைமுக தொழிற்சங்கங்களின் ஐக்கிய கூட்டமைப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்ட மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று (23) கொழும்பு துறைமுகத்தின் பிரதான நுழைவாயிலுக்கு அருகிலுள்ள மணிக்கூட்டு கோபுரத்திற்கு முன்பாக நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பெருமளவிலான மக்கள் கலந்துகொண்டதையடுத்து, கொழும்பு முதலாம் குறுக்குத் தெரு, என்.எச்.எம்.அப்துல் காதர் மாவத்தை என்பன முற்றாகத் தடைப் பட்டன. திருடர்களைக் காக்கும் ரணில் ராஜபக்ஷவை விரட்டுவோம், செய்யக்கூடிய ஒருவருக்குக் கொடுங்கள் பாவம் செய்யாதீர்கள் போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு குழுவினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டம் நடைபெற்ற பகுதிக்கு பலத்த பாதுகாப்புப் போடப்பட்டிருந்ததுடன், பொலிஸாரும் இராணுவத்தினரும் அந்த இடத்திற்கு வரவழைக்கப்பட்டிருந்தனர்.

ஸ்ரீ லங்கா மஹ பெங்குவ
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## 23.01.2023 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 138 8017 | 150 3877 |
| கனேடியன் டொலர் | 156 77 4 | 168 6171 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 41 1815 | 44 3251 |
| யூரோ | 28 2511 | 3 5 12 |
| ஜப்பான் யென் | 1 66 6 | 1 7745 |
| சிங்கப்பூர் டொலர் | 161 543 | 172 273 |
| ஸ்ரேலிங் பவுன் | 335 0554 | 352 751 |
| சுவிஸ் பிராங்ங் | 277 8160 | 3 6 5264 |
| ஐ.அ.டொலர் | 25 4385 | 260 2734 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 85 4618 |
| குவைட் | குவைட் தினார் | 0,074 674 |
| ஓமான் | ஓமான் றியால் | 83 5154 |
| கட்டார் | கட்டார் றியால் | 88 1353 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 3106 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 4868 |

# சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட 12,250 கிலோ மஞ்சள், 2,80,000 சிகரெட்டுகள் மீட்பு




சுங்க வரி செலுத்தாமல் சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட மஞ்சள் தொகை மற்றும் சிகரெட்டுகளுடன் சந்தேகநபர்கள் மூவர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை மஹாபாகே பொலிஸ் நிலையத்திற்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் கொள்கலன்களில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் 12,250 கிலோ கிராம் மஞ்சளுடன் 3 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அதன்பின்னர் இவ்வாறு மஞ்சள் தொகை மீட்கப்பட்ட 245 உரப்பைகள் சோதனைக்குட் படுத்தப்பட்டபோது அவற்றிலிருந்து 2,80,000 சிகரெட்டுகளும் கைப் பற்றப்பட்டுள்ளன. இதன்போது கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 37, 38 மற்றும் 59 வயதுக்கு இடைப் பட்ட ராகமை மற்றும் பேலியகொட பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாவர்.

குறித்த சந்தேகநபர்கள் கடந்த சனிக்கிழமை வெலிசறை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். மஹாபாகே பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

# பாடசாலை கல்விச் சுற்றுலாக்களுக்கு புதிய நிபந்தனைகளை விதித்த கல்வி அமைச்சு

கல்விச் சுற்றுலாக்களில் ஈடுபடும் பாடசாலை மாணவர்களின் பாதுகாப்புக்காக புதிய நிபந்தனைகளை அறிமுகப்படுத்த கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன்படி, பயணத்தின் தூரத்தை அதிகபட்சமாக நூறு கிலோமீற்றராக மட்டுப்படுத்தி, மாலை ஆறு மணிக்குள் பாடசாலைகளுக்குத் திரும்புவதற்கான நிபந்தனைகள் கல்விப் பயணங்கள் தொடர்பான சுற்றறிக்கையில் உள்ளடக்கப்படும் - என கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

ஒரே நாளில் பயணிக்கக் கடினமான தூரத்தை கல்விப் பயணத்துக்கு பயன்படுத்துவது நடைமுறைச் சாத்தியமில்லை என்றும் இனிமேல் பயணங்களுக்கு ஏற்ற இடங்கள் குறித்து கவனம் செலுத்த வேண்டும் என்றும் அமைச்சர் கூறினார்.

மாணவர்களின் பாதுகாப்புக்காக தற்போது பின்பற்றப்படும் ஏனைய ஏற்பாடுகள் தொடர்பில் தீவிர கவனம் செலுத்தப்பட வேண்டும் எனவும், பாடசாலை முதலாம் தவணை ஆரம்பிக்கும்போது திருத்தப்பட்ட சுற்றறிக்கை வெளியிடப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

கடந்த 20ஆம் திகதி நானுஓயாவில் இடம்பெற்ற விபத்தின் பின்னர் அமைச்சு இது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளது. தற்போதுள்ள ஏற்பாடுகளின்படி சுற்றுலா செல்ல வலயக் கல்வி அலுவலகத்தில் அனுமதி பெற வேண்டும். மாணவர்கள் பயணிக்கும் வாகனத்தின் பொருத்தம் குறித்து விசேட கவனம் செலுத்தப்படுகிறது. மேலும் வாகனம் காப்புறுதி செய்யப்பட வேண்டும். பயணத்தின் பாதை விளக்கத்தையும் வலயக் கல்வி அலுவலகத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

# க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மரணதண்டனை கைதி

மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள சிறைக் கைதி ஒருவர் நேற்று ஆரம்பமான 2022 க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் மரணதண்டனை விதிக்கப்பட்டாலும் அது நடைமுறைப்படுத்தப்படாமல் ஆயுள் தண்டனையாக வழங்கப்பட்டுள்ளது.

வெலிக்கடை சிறைச்சாலையிலிருந்து மேலும் நான்கு கைதிகளும் 2022/23 க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளதாக திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

கைதிகள் வெலிக்கடையிலுள்ள மகசின் சிறைச்சாலை பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்றுவார்கள்.

இதேவேளை, யாழ்ப்பாண சிறைச்சாலையில் உள்ள கைதி ஒருவரும் 2022 க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
ஞாயிற்றுக்கிழமை 2023.01.22
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

| சீட்டிழுப்பு | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் |
|---|---|---|---|---|
| மஹஜன சம்பத | 5008 | ரூ. 15,941,755.00 | N | 5 0 9 6 8 8 |
| கொவிசெத | 3250 | ரூ. 72,850,382.00 | J | 44 64 79 80 |
| ஜாதிக சம்பத | 1463 | ரூ. 13,554,125.60 | வெற்றி இலக்கினம்: மீனம் | 6 1 7 5 6 0 |
| தன நிதானய | 1038 | ரூ. 143,313,506.00 | Y | 05 07 53 73 |
| ராசி சுப பலன் (Handahana) | 317 | ரூ. 2,541,394.80 | வெற்றி இலக்கினம்: துலாம்; விசேட இலக்கினம்: துலாம் | 05 12 31 33 |
| மெகா பவர் | 1356 | ரூ. 294,446,202.00 | R (சுப்பர் இலக்கம் 14) | 03 25 34 67 |

அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்தல்

**2021இற்கான க.பொ.த. (உ/த) மீளாய்வு முடிவுகளின் அடிப்படையில் பெறுபேறுகள் மாற்றம் பெற்ற விண்ணப்பதாரர்கள் மற்றும் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கத் தவறியதால் மேன்முறையீடு செய்த விண்ணப்பதாரர்களிடமிருந்து 2021/2022 கல்வியாண்டிற்கான பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

17ஆம் திகதி ஜனவரி, 2023 அன்று வெளியிடப்பட்ட 2021க்கான க.பொ.த. (உயர்தர) மீளாய்வு முடிவுகளின் அடிப்படையில் பெறுபேறுகள் மாற்றம் பெற்ற விண்ணப்பதாரர்கள் மற்றும் 2021/2022 கல்வியாண்டிற்கான பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க முன்னர் வழங்கப்பட்ட காலக்கெடுவிற்குள் விண்ணப்பிக்கத் தவறியதால் மேன்முறையீடு செய்த விண்ணப்பதாரர்களிடமிருந்தும், இணையவழி மூலம் விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு முடிவு செய்துள்ளது. அத்தகைய விண்ணப்பதாரர்கள் 2021/2022 கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கு 24ஆம் திகதி ஜனவரி 2023 முதல் 31ஆம் திகதி ஜனவரி 2023 வரை இணையவழி மூலம் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்களை கோருவது குறித்த செய்தித்தாள் விளம்பரம் ஏற்கனவே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் (www.ugc.ac.lk) வெளியிடப்பட்டுள்ளது.

**முக்கியம்**


2021/2022 கல்வியாண்டிற்கு செல்லுபடியாகும் பல்கலைக்கழக அனுமதி கைநூலில் கொடுக்கப்பட்டுள்ள மற்ற தேவைகளை பூர்த்தி செய்து, இணையவழி மூலம் விண்ணப்பத்தை சமர்ப்பித்த பிறகு உருவாக்கப்பட்ட அச்சிடப்பட்ட முறையாக பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பத்தின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல் அல்லது தெளிவான புகைப்படத்தை அனுப்புவது கட்டாயத் தேவை என்பதை நினைவிற்கொள்ளவும். apply2021@ugc.ac.lk என்ற மின்னஞ்சலுக்கு, பதிவுத் தபால் மூலம் அனுப்பவும்.

விருப்பொழுங்கு வரிசையை மாற்றுவதற்கு வழங்கப்பட்ட 30 நாட்கள் கால அவகாசம் இந்தச் சந்தர்ப்பத்தில் பொருந்தாது என்பதை நினைவிற்கொள்ளவும்.

மேலும், மேற்கூறிய விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படும் 2021/2022 கல்வி யாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கான இந்த வாய்ப்பு, சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகத்தால் / வளாகம் / நிறுவனத்தினால் ஏற்கனவே நடத்தப்பட்ட செயன்முறை/உளச்சார்பு தேர்வுகள் கொண்ட கற்கைநெறிகளுக்குப் பொருந்தாது என்பது குறிப்பிடத்தக்கது.

**தலைவர்**
**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு**
13 01 12

# பாலத்தின் மத்தியில் வழிவிட்ட லொறி 20அடி பள்ளத்தில் கவிழ்ந்து விபத்து



(தலவாக்கலை நிருபர்)

கொட்டகலை - யதன்சைட் தோட்டத்திலிருந்து கொட்டகலை நகரை நோக்கி பயணித்த சிறியரக லொறி ஒன்று நேற்று முன்தினம்(22) மாலை வீதியில் அமைந்துள்ள பாலத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. இதன்போது லொறியின் சாரதியும் அவரது உதவியாளரும் காயமடைந்து டிக்கோயா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக திம்புள்ளை - பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்து குறித்து மேலும் தெரிவிக்கையில், சம்பவத்தன்று மாலை 4 மணியளவில் யதன்சைட் தோட்டத்திலிருந்து கொட்டகலை நகருக்கு சென்றுகொண்டிருந்த லொறியானது எதிர்த்திசையில் வந்துகொண்டிருந்த மோட்டார் சைக்கிளுக்கு பாலத்தின் மத்தியில் இடமளிக்க முற்பட்டபோது பாலத்தின் கீழே 20அடி பள்ளத்தில் விழுந்துள்ளது.

லொறியில் மேலும் இருவர் பயணித்துள்ள நிலையில் அவர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. மேலும் லொறிக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ள அதேவேளை, சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# நுவரெலியாவில் தாக்கல் செய்யப்பட்ட 108 வேட்புமனுக்களில் 17 நிராகரிப்பு

(செ. திவாகரன், எஸ்.கணேசன்)



## மாவட்ட செயலாளர் நந்தன கலபட

நுவரெலியா மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக்குழுக்கள் சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட 108 வேட்புமனுக்களில் 17 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக நுவரெலியா மாவட்ட செயலாளரும் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியுமான நந்தன கலபட தெரிவித்தார்.

மேலும் அங்கீகரிக்கப்பட்ட 85 அரசியல் கட்சிகள், 6 சுயேச்சைக் குழுக்கள் உட்பட 91 வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நுவரெலியா மாநகர சபைக்காக சமர்ப்பிக்கப்பட்ட 10 வேட்புமனுக்களில் ஒரு மனு நிராகரிக்கப்பட்ட அதேவேளை, கொட்டகலை பிரதேச சபையில் சமர்ப்பிக்கப்பட்ட 11 வேட்பு மனுக்களில் 5 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. நோர்வூட் பிரதேச சபைக்கு தாக்கல் செய்யப்பட்ட மனுக்களில் 3 மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

நுவரெலியா பிரதேச சபைக்கு தாக்கல் செய்யப்பட்ட 10 வேட்பு மனுக்களில் 2 மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. ஹங்குரங்கெத்த பிரதேச சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட 8 வேட்பு மனுக்களில் ஒரு மனு நிராகரிக்கப்பட்ட அதேவேளை, அக்கரப்பத்தனை பிரதேச சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட 9 வேட்பு மனுக்களில் ஒரு மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

வலப்பனை மற்றும் அம்பகமுவ பிரதேச சபைகளுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தலா 9 வேட்பு மனுக்களில் ஒவ்வொரு மனு நிராகரிக்கப்பட்டுள்ளது. மேலும் கொத்மலை மற்றும் மஸ்கெலியா ஆகிய பிரதேச சபைகளுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தலா 6 வேட்பு மனுக்களில் ஒவ்வொரு வேட்பு மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

தலவாக்கலை - லிந்துலை மற்றும் ஹட்டன் - டிக்கோயா ஆகிய நகரசபைகளுக்கு தாக்கல் செய்யப்பட்ட தலா 7 வேட்பு மனுக்களும் ஏற்றுக்கொள்ளப்பட்ட அதேவேளை எந்தவொரு மனுவும் நிராகரிக்கப்படவில்லை.

இதன்படி, நுவரெலியா மாவட்டத்தின் 12 உள்ளூராட்சி மன்றங்களுக்கும் தேர்தல் மூலம் 1345 வேட்பாளர்கள் மற்றும் போனஸ் மூலம் 1130 வேட்பாளர்கள் உட்பட மொத்தம் 2475 பேர் தேர்தலில் போட்டியிடவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# சப்ரகமுவ மாகாணத்தில் இடம்பெற்ற தைத்திருநாள் நிகழ்வும் கௌரவிப்பும்



(இரத்தினபுரி நிருபர்)

அழிந்துவரும் தமிழ்க் கலை, பண்பாடு ஆகியவற்றை பாதுகாக்கும் வகையில் இலங்கை தமிழ் பண்பாட்டு ஆய்வு, மன்றம் சப்ரகமுவ மாகாண கல்வித் தகவல் தொழில்நுட்ப கலாசார அமைச்சு மற்றும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் என்பவற்றுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தைத்திருநாள் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை(20) சப்ரகமுவ மாகாண சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாக இலங்கைக்கான இந்திய உதவி உயர்ஸ்தானிகர் ஆதிரா மற்றும் வீரகேசரி பத்திரிகையின் நிர்வாக இயக்குநரும் உலகளாவிய இந்திய வம்சாவளி மக்கள் பேரவையின் தலைவருமான குமார் நடேசன் மற்றும் மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது பொங்கல் பொங்குதல், உறியடித்தல், சிலம்பாட்டம், பறையிசை போன்ற பாரம்பரிய நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் பாடசாலை மாணவர்களின் வரவேற்பு நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இதன்போது மாகாண ஊடகப்பிரிவின் பொறுப்பதிகாரி சிவா ஸ்ரீதரராவ் மற்றும் சமூக சேவையாளர் விஸ்வநாதன் ஆகியோர் உட்பட பல்வேறு கலைஞர்களும் இதன்போது விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும், மாகாண பிரதான செயலாளர் மஹிந்த எஸ்.வீரசூரிய, ஆளுநரின் பிரத்தியேக செயலாளர் மஞ்சுளா இதிகாவெல மற்றும் மாகாண அமைச்சுகளின் செயலாளர்கள், கல்வி அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.



பசறை வலயக் கல்விப் பணிமனையில் தைப்பொங்கல் விழா சிறப்பாக இடம்பெற்றது. கல்விப் பணிப்பாளர் ஸரீனா பேகம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்துகொண்ட இந்நிகழ்வில் தமிழர் பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. (நடராஜா மலர்வேந்தன்)

# அகதி வாழ்வை வாழ்ந்துவரும் பொலிகண்டி மக்களை சொந்த மண்ணில் மீள்குடியேற்ற அரசு துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்

## மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிறாடோ





(மன்னார் நகர் நிருபர்)

யாழ்ப்பாணம் வலி. வடக்கு பொலிகண்டி பகுதியிலுள்ள இடைத்தங்கல் முகாம்களில் கடந்த 32 வருடங்களுக்கு மேலாக பல்வேறு இடர்களுக்கு மத்தியில் வாழ்ந்துவரும் மக்களை வலி. வடக்கிலுள்ள தமது சொந்த காணிகளில் மீள்குடியேற்ற வேண்டுமென தொடர்ந்து அரசுக்கு வலியுறுத்தி வருகின்றபோதும் இதுவரை எவ்வித முன்னேற்றமும் இல்லை - என மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிறாடோ தெரிவித்தார்.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிறாடோ தலைமையில், மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணியாளர்கள் இணைந்து 6 நலன்புரி நிலையங்களில் வாழ்ந்துவரும் 65 குடும்பங்கள், உறவினர்கள் வீட்டிலுள்ள 35 குடும்பங்கள் உள்ளடங்கலாக 100 குடும்பங்களுக்கு அத்தியாவசிய உலருணவுப் பொதிகளை இன்று (நேற்று முன்தினம்) வழங்கினர். அதனைத் தொடர்ந்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் வலி. வடக்கு பொலிகண்டி பகுதியிலுள்ள இடைத்தங்கல் முகாம்களில் கடந்த 32 வருடங்களுக்கு மேலாக பல்வேறு இடர்களுக்கு மத்தியில் வலி. வடக்கு மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

சுமார் 32 வருடங்களுக்கு மேலாக 6 நலன்புரி நிலையங்களிலும், உறவினர்கள் வீடுகளிலும் சொந்த நிலம் இருந்தும் அகதி வாழ்வை வாழ்ந்து வருகின்றார்கள்.

மழைக்காலங்களில் பெண்கள், குழந்தைகள், வயோதிபர்கள் முகாம்களில் பல்வேறு துன்பங்களுக்கு முகங்கொடுத்து வருவதை நாங்கள் நேரடியாக அவதானித்துள்ளோம்.

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு ஓர் உதவியாகவே நாங்கள் தொடர்ந்து நிவாரண உதவியை முன்னெடுத்து வருகிறோம். 1990ஆம் ஆண்டிலிருந்து இந்த முகாம்களில் வாழ்ந்து வருகிறார்கள்.உங்கள் நிலங்களை விடுவிக்கக்கோரி தொடர்ந்து போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றீர்கள்.

மக்களினுடைய காணிகளை ஏன் அதி உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்த வேண்டும்? 1990ஆம் ஆண்டு மக்கள் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த பின் இன்றுவரை அந்த மக்களின் தனியார் காணிகள் அதி உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த உயர் பாதுகாப்பு யாருக்கு? மக்களுக்கு பாதுகாப்பை வழங்க வேண்டிய அரசு மக்களின் காணிகளை பிடித்து அதில் முகாம் அமைத்து அதற்கு பாதுகாப்பு வழங்கி வருகின்றது. இதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. மக்களின் வரிப்பணத்தில் இயங்கும் அரசு இன்று மக்களை முகாம்களில் தவிக்க விட்டுள்ளது.

எனவே, முகாம்களில் உள்ள மக்களை மீண்டும் அரசு அவர்களின் சொந்த நிலங்களில் மீளக் குடியமர்த்தி அந்த மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் – என்றார்.

# வெண்கரம் அமைப்பின் பொங்கல் விழா



வெண்கரம் அமைப்பின் ஏற்பாட்டில் பொங்கல் நிகழ்வானது மல்லாகம் - நரியிட்டான், இளைய நிலா சனசமூக நிலையத்தில் நேற்று முன்தினம் (22) நடைபெற்றது.

இதன்போது பாரம்பரிய விளையாட்டுகளான கிறிஸ்மரம் ஏறுதல், தேங்காய் உரித்தல், தேங்காய் துருவுதல், முட்டி உடைத்தல், இடியாப்ப தட்டு பின்னுதல், கயிறு இழுத்தல் மற்றும் சிறுவர்களுக்கான நிகழ்வுகள் இடம்பெற்றன. சனசமூக நிலையத்தின் தலைவர் பொ.வசந்தனின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், தவத்திரு வேலன் சுவாமிகள், சிவஸ்ரீ வை.ஜீவநாத குருக்கள், வெண்கரம் அமைப்பின் புலம்பெயர் செயற்பாட்டாளர் கந்தசாமி பரிமேலழகன், டான் ரிவி முகாமையாளர் இளையதம்பி செல்வச்சந்திரன், வெண்கரம் நிறுவனத்தின் செயற்பாட்டாளர்களான முருகையா கோமகன், ந.பொன்ராசா ஆகியோர் விருந்தினராக கலந்துகொண்டதுடன், சமூக மட்ட அமைப்பினர், இளைஞர்கள், யுவதிகள், பெற்றோர்கள் மற்றும் சிறுவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# சைவப்புலவர் பட்டமளிப்பு விழாவும் சைவ மாநாடும் சாவகச்சேரியில்



(சாவகச்சேரி நிருபர்)

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் வைரவிழாவையொட்டி நடத்தப்பட்ட சைவப்புலவர் பட்டமளிப்பு விழாவும் சைவ மாநாடும் நேற்று முன்தினம் (22) சாவகச்சேரி பூமாரி மண்டபத்தில் இரு அமர்வுகளாக இடம்பெற்றன.

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் தலைவர் சி.கா.கமலநாதன் தலைமையில் இடம்பெற்ற அமர்வில், பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் எஸ்.சற்குணராஜா கலந்து சிறப்பித்திருந்தார்.

இந்நிகழ்வானது நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர், திருக்கேதீஸ்வரம் குமரபுர ஆதீன தம்பிரான் சுவாமிகள் மற்றும் யாழ்ப்பாணம் ஸ்ரீ சிவகுருநாத வேதாந்த பீட குரு பீடாதிபதி ஆகியோரின் ஆசிகளுடன் இடம்பெற்றிருந்தது.

நிகழ்வில் சிறப்பம்சங்களாக வைரவிழாவையொட்டி தயாரிக்கப்பட்ட 'சைவநாதம்' மலர் வெளியீடு, சைவப்புலவர்கள் மற்றும் இளஞ்சைவப் புலவர்களுக்கான பட்டமளிப்பு, வைரவிழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட திறன் விருத்திப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு ஆகியன இடம்பெற்றிருந்தன.

அதனைத் தொடர்ந்து சைவப்புலவர் சங்கத்தின் உபதலைவர் சி.ஞானசூரியர் தலைமையில் இடம்பெற்ற மாலை அமர்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் ப.கோபால கிருஷ்ண ஐயர் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்திருந்தார்.

மேலும் சமூகசேவகர் சிவராசா, தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கிருபாகரன், பேராசிரியர்கள், எனப்பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

# யாழ். மாநகர சபையின் பொங்கல் நிகழ்வு





யாழ்ப்பாணம் மாநகரசபையின் ஏற்பாட்டில் பொங்கல் நிகழ்வு நேற்று முன்தினம் (22) யாழ்ப்பாணம் பண்ணை கடற்கரை பூங்கா திடலில் இடம்பெற்றது.

மாநகர ஆணையாளர் இ.த.ஜெயசீலனின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக மாநகர முதல்வர் இம்மானுவல் ஆர்னோல்ட் கலந்து சிறப்பித்தார்.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் திணைக்களங்களுக்கிடையே பொங்கல் போட்டி நிகழ்வுகளும் முட்டி உடைத்தல் மற்றும் சங்கீதக் கதிரை உள்ளிட்ட பொது விளையாட்டு நிகழ்வுகளும் இடம்பெற்றன. போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

மேற்படி நிகழ்வில் யாழ். மாநகர சபையின் ஆணையாளர், செயலாளர், பிரதம கணக்காளர், பிரதம பொறியியலாளர், மாநகர சபை பதவிநிலை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 20 கிராம் கஞ்சாவுடன் கைதானவருக்கு விளக்கமறியல்

(சாவகச்சேரி நிருபர்)

தென்மராட்சி-கெற்பேலி பகுதியில் 20.3 கிராம் கஞ்சாவுடன் கைதான நபரை எதிர்வரும் மூன்றாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க சாவகச்சேரி நீதவான் யூட்சன் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை (21) பிற்பகல் சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் 45 வயதான நபர் ஒருவர் 20 கிராம் 300 மில்லி கிராம் கஞ்சா போதைப்பொருளுடன் மதுவரிப் பொறுப்பதிகாரி ரஷிகரன் தலைமையிலான குழுவினரால் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

இந்நிலையில், கைதான சந்தேக நபர் நீதவான் முன்னிலையில் நிறுத்தப்பட்டு 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

## ரூ. 3 கோடிக்கும் அதிக பெறுமதியான தொல்பொருட்களுடன் மூவர் கைது

களுத்துறை தெற்கு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் புதையல் ஒன்றிலிருந்து எடுக்கப்பட்டதாக சந்தேகிக்கப்படும் தொல்பொருட்களை வைத்திருந்த மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பாணந்துறை மத்திய ஊழல் தடுப்புப் பிரிவின் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் களுத்துறை பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் வாகனத் தரிப்பிடத்திற்கு அருகில் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது குறித்த பொருட்களின் பெறுமதி ரூ. 3 கோடி எனவும் அதனை அவர்கள் விற்பனை செய்யத் தயாராக இருந்தமையும் தெரியவந்துள்ளது.

இந்த மோசடிக்குத் தலைமை தாங்கிய பிரதான சந்தேகநபர் உடல்நலக் காரணங்களால் இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்ற இராணுவ வீரர் என தெரியவந்துள்ளது. சந்தேக நபர் மொரகஹகந்த பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடையவராவார். மற்றைய இருவரும் 36 மற்றும் 42 வயதுடையவர்கள் எனவும் அவர்கள் கந்தர மற்றும் களுவா மோதர பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என்றும் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்கள் களுத்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். களுத்துறை வடக்கு பொலிஸார் மற்றும் பாணந்துறை மத்திய ஊழல் தடுப்பு பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தலைவர் சம்பந்தனை தலைமையிலிருந்து நீக்கியதாக அவமானப்படுத்தக்கூடாது!

## சீ.வீ.கே.சிவஞானம் தெரிவிப்பு




ஊடக அறிக்கை மூலம் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் பதவி இல்லாமல் ஆக்கப்பட்டதாக கூற முடியாது என வடக்கு மாகாண சபையின் அவை தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் தெரிவித்தார்.

நேற்று தனது அலுவலகத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த சில நாட்களாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழரசுக் கட்சி, அதனுடைய செயற்பாடுகள் தொடர்பான கருத்து வேறுபாடுகள் சம்பந்தமாக பல செய்திகள் வெளிவந்துள்ளன.

அது பற்றி விமர்சனம் செய்ய நாங்கள் விரும்பவில்லை. ஆனால், இருந்தாலும் கூட நேற்றைய தினம் ரெலோவின் பேச்சாளர், சம்பந்தன் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் பதவியில் இல்லை அல்லது அவருடைய தலைவர் பதவி வறிதாக்கப்பட்டுள்ளது எனவும் கூறியதாக ஊடகங்கள் கூறுகின்றன.

தமிழரசுக் கட்சி கூட்டமைப்பிலிருந்து வெளியேறவில்லை. ஆனால், இரண்டு கட்சிகளும் பல காலமாகவே உரசிக் கொண்டிருந்த விடயம். அந்த விடயத்தை அவர்கள் நிறைவேற்றியிருக்கின்றார்கள். அது அவர்களுடைய உரிமை.

கூட்டமைப்பின் தலைவர் என்பது இதுவரையில் அதாவது பாராளுமன்றத் தேர்தல்கள் முடிந்ததும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்ட மூன்று கட்சிகளும் அதன் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றாகச் சேர்ந்து கடந்த 2020ஆம் ஆண்டு தேர்தலுக்குப் பின்னர் சம்பந்தனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக்குழுத் தலைவராக தேர்வு செய்து இருக்கின்றார்கள். அது முன்பும் அவ்வாறே நடந்தது. ஆகவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் தெரிவு என்பது பாராளுமன்றக் குழுவால் இடம்பெறுவதாகும். இதுவரையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்றாலே அது பாராளுமன்றக் குழுவாகவே இருந்திருக்கின்றது.

பாராளுமன்றக் குழு தெரிவு செய்த சம்பந்தன் இன்னும் அந்த பதவியில்தான் இருக்கின்றார். ஆகவே அவரை நீக்குவதோ அல்லது அந்த பதவியை வறிதாக்குவதோ வெறுமனே ஒரு ஊடக அறிக்கை மூலம் சொல்ல முடியாது.

முறைப்படியாக பாராளுமன்றக் குழு கூடி அல்லது விரும்பினால் அவரை நீக்கலாம் அல்லது அவர் விரும்பினால் விலகலாமே தவிர பதவி வறிதாக்கல் - செயலற்றுப் போதல் என நீண்ட வரலாற்றைக் கொண்ட ஒரு தலைவரை இவ்வாறு அவமதிக்கின்ற ஒரு கூற்று என்னைப் பொறுத்தவரையில் தமிழரசுக் கட்சி சார்ந்தது மட்டுமல்லாது, பொதுவாகவே ஒரு மனிதனுடைய மதிப்பு சார்ந்த விடயத்தில் அதை ஆட்சேபிக்கின்றேன். அது தவறு. சம்பந்தன் இன்னும் பாராளுமன்றக் குழுவின் தலைவராகவும் கூட்டமைப்பின் தலைவராகவும் செயற்படுகின்றார் என்பதே உண்மை என்றார்.

## பாடசாலை கல்விச் சுற்றுலாக்களுக்கு புதிய நிபந்தனைகளை விதித்த கல்வி அமைச்சு

கல்விச் சுற்றுலாக்களில் ஈடுபடும் பாடசாலை மாணவர்களின் பாதுகாப்புக்காக புதிய நிபந்தனைகளை அறிமுகப்படுத்த கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன்படி, பயணத்தின் தூரத்தை அதிகபட்சமாக 100 கிலோ மீற்றராக மட்டுப்படுத்தி, மாலை 6 மணிக்குள் பாடசாலைகளுக்குத் திரும்புவதற்கான நிபந்தனைகள் கல்விப் பயணங்கள் தொடர்பான சுற்றறிக்கையில் உள்ளடக்கப்படும் என கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

ஒரே நாளில் பயணிக்கக் கடினமான தூரத்தை கல்விப் பயணத்துக்கு பயன்படுத்துவது நடைமுறைச் சாத்தியமில்லை என்றும் இனிமேல் பயணங்களுக்கு ஏற்ற இடங்கள் குறித்து கவனம் செலுத்த வேண்டும் என்றும் அமைச்சர் கூறினார்.

மாணவர்களின் பாதுகாப்புக்காக தற்போது பின்பற்றப்படும் ஏனைய ஏற்பாடுகள் தொடர்பில் தீவிர கவனம் செலுத்தப்பட வேண்டும் எனவும், பாடசாலை முதலாம் தவணை ஆரம்பிக்கும்போது திருத்தப்பட்ட சுற்றறிக்கை வெளியிடப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார். கடந்த 20ஆம் திகதி நானுஓயாவில் இடம்பெற்ற விபத்தின் பின்னர் அமைச்சு இது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளது.

தற்போதுள்ள ஏற்பாடுகளின்படி சுற்றுலா செல்ல வலயக்கல்வி அலுவலகத்தில் அனுமதி பெற வேண்டும். மாணவர்கள் பயணிக்கும் வாகனத்தின் பொருத்தம் குறித்து விசேட கவனம் செலுத்தப்படுகிறது. மேலும், வாகனம் காப்புறுதி செய்யப்பட வேண்டும். மேலும், பயணத்தின் பாதை விளக்கத்தையும் வலயக் கல்வி அலுவலகத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.




2022ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை நேற்று ஆரம்பமானது. யாழ்.நகரிலுள்ள அனைத்துக் கல்லூரிகளிலும் பரீட்சை இடம்பெறுகின்றது. யாழ். மாவட்டத்தில் 8,990 பரீட்சாத்திகள் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர். குறித்த பரீட்சையில் வடக்கு மாகாணத்தில் 139 பரீட்சை நிலையங்களில், பாடசாலை மாணவர்கள் 15,156 பேரும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் 2,399 பேரும் மொத்தமாக 17 ஆயிரத்து 555 பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர் என வடமாகாண கல்விப்பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ் தெரிவித்தார்.



எதிர்வரும் மார்ச் மாதம் 9ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பேருவளை நகரசபைக்கு தேசிய மக்கள் சக்தி சார்பில் தற்போதைய நகரசபை உறுப்பினர் அருஸ் அஸாத் தலைமையில் போட்டியிடும் வேட்பாளர்கள் வேட்புமனுத் தாக்கலின் பின்னர் எடுத்துக்கொண்ட படம். (படம் - பேருவளை பீ.எம்.முக்தார்)

## மோட்டார் சைக்கிள் பதிவுக்கான புதிய விதிமுறைகள் அமுலாகும்

இறக்குமதி செய்யப்படும் மின்சார மோட்டார் சைக்கிள்களை பதிவு செய்வது தொடர்பான விதிமுறைகளை வகுப்பதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இக்குழுவானது இது தொடர்பான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த தெரிவித்துள்ளார்.

மோட்டார் போக்குவரத்து சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ளதாகவும், அதன்படி இந்த மின்சார வாகனங்களை பதிவு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.




அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் வெலிப்பன்னை கிளையின் 2023ஆம் ஆண்டுக்கான செயற்றிட்டத்தின் ஓர் அங்கமாக பாடசாலை, பொலிஸ் நிலையம் அரச அலுவலகங்கள் மற்றும் பொதுமக்களுக்கு தென்னம்பிள்ளைகள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. வெலிப்பன்னை வை.எம்.எம்.ஏ. கிளையின் செயலாளரும் ஓய்வுபெற்ற அதிபருமான ஏ.டபிள்யூ.எம்.அஸார் (ஜே.பி.) இவற்றைக் கையளித்தார். வை.எம்.எம்.ஏ.வெலிப்பன்னைக் கிளையின் பொதுப் பணிகளை இதன்போது பலரும் பாராட்டினர்.

## இலங்கையில் இருந்து மேலும் 5 பேர் அகதிகளாக இராமேஸ்வரத்தில் தஞ்சம்



(மன்னார் நிருபர்)

இலங்கைத் தமிழர்கள் 5 பேர் நேற்று திங்கட்கிழமை (23) காலை இராமேஸ்வரத்தை அடுத்த சேராங்கோட்டை கடற்கரைக்கு அகதிகளாக சென்றடைந்துள்ளனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக மக்கள் கடந்தாண்டு மார்ச் மாதம் முதல் இலங்கையிலிருந்து தனுஷ்கோடிக்கு அகதிகளாக சென்றுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டம் பாரதிபுரத்தை சேர்ந்த பாரதி டிஸ், அவரது தாய் முனியம்மா, அவரது இரண்டு மகன்கள், ஒரு மகள் என ஒரே குடும்பத்தை சேர்ந்த 5 பேர் கிளிநொச்சி மாவட்டம் நாச்சிக்குடா கடற்கரையிலிருந்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (22) காலை மீன்பிடிப் படகில் புறப்பட்டு நேற்று திங்கட்கிழமை (23) அதிகாலை இராமேஸ்வரத்தை அடுத்துள்ள சேராங்கோட்டை கடற்கரையை சென்றடைந்துள்ளனர்.

தகவலறிந்த இராமேஸ்வரம் மரைன் பொலிஸார் இலங்கைத் தமிழர்களை மீட்டு மண்டபம் மரைன் காவல் நிலையத்தில் வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

பாதுகாப்பு வட்டார அதிகாரிகளின் விசாரணைக்குப் பிறகு 5 பேரும் மண்டபம் அகதிகள் முகாமில் ஒப்படைக்கப்படவுள்ளனர்.



நுவரெலியாவை பூர்வீகமாகக் கொண்டவரும் சென்னையில் தொழிலதிபராக விளங்கியவருமான அமரர் பி.எம்.தர்மலிங்கத்தின் முதலாம் ஆண்டு நினைவுதினம் நேற்று முன்தினம் (22) உடபுஸ்ஸல்லாவ அலகொலயில் அனுஷ்டிக்கப்பட்டது. இதன்போது அவரின் புதல்வர் போஸ் தர்மலிங்கத்தால் தோட்ட மக்களுக்கு உலருணவுப் பொருட்கள் வழங்கிவைக்கப்பட்ட அதேவேளை, அறநெறி மாணவர்களால் வாழ்த்தும் தெரிவிக்கப்பட்டது. (ஆ.ரமேஸ்)

## பெப்ரவரி முதல் நீர்க் கட்டணப்பட்டியல் மாற்றம் - நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அறிவிப்பு



(மு.தமிழ்ச்செல்வன்)

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை யானது நீர் இணைப்பைப் பெற்றுள்ள தனது வாடிக்கையாளர்களுக்கு மாதந்தோறும் அச்சிடப்பட்ட பெரியளவிலான தாள்களில் வழங்கி வந்த மாதாந்த நீர்க் கட்டணப் பட்டியலானது, இனி விரைவில் அச்சிடப்பட்ட இயந்திரப் பிரதியாக, நீர் இணைப்பை பெற்றுள்ள வாடிக்கையாளர்களுக்கு அந்தந்த இடங்களில் வைத்தே வழங்கப்படும் எனவும் இதுவே உத்தியோகபூர்வ கட்டணப்பட்டியல் எனவும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது.

சூழலுக்கு நட்பாக இருத்தல் மற்றும் வாடிக்கையாளர்கள் இலகுவாக கையாள்தல், செலவுகளை கட்டுப்படுத்தல் போன்ற காரணங்களை கருத்தில் இம்முறை நடைமுறைப்படுத்தப் படவுள்ளது.

Mobile Point of Sale Machine இயந்திரம் (அதாவது பஸ்களில் நடத்துனர் பயன்படுத்துகின்ற சிட்டை வழங்கும் இயந்திரம் போன்றது) மூலம் நீர் இணைப்புள்ள அந்தந்த இடங்களிலேயே மாதாந்த நீர்க்கட்டணப் பட்டியல் வழங்கப்படும். இதற்கு மேலதிகமாக முழுமையான பட்டியலைப் பெற விரும்புகின்ற வாடிக்கையாளர்கள் மின்னஞ்சல் மூலம் ஈ பட்டியலை ( E-Bill) பெற்றுக்கொள்ள முடியும். அத்தோடு குறுந்தகவல் மூலமும் கட்டண விபரங்கள் அனுப்பபடும். இதற்கான பரீட்சார்த்த நிகழ்வு நாடாளவிய ரீதியில் முதன்முதலாக வட மாகாணத்தில் கடந்த வாரம் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகத்தில் இடம்பெற்றது.

இது குறித்து வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த அனைத்து மாவட்டங்களிலும் நீர்மானி வாசிப்பாளர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு ஒரு நாள் பயிற்சியளிக்கப்பட்டுள்ளதோடு, குறித்த மாதாந்த நீர்க் கட்டணப்பட்டியல் தொடர்பில் வங்கிகள், தபால் நிலையம், நிதி நிறுவனங்கள் மற்றும் கட்டணம் செலுத்தக்கூடிய முகவர்கள் ஆகியோருக்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

## தேசிய மருத்துவமனைப் பணியாளர்கள் நான்கு மணிநேரம் வேலை நிறுத்தம்




பல கோரிக்கைகளை முன்வைத்து கொழும்பு தேசிய வைத்தியசாலையின் சுகாதார ஊழியர்கள் நேற்று (23) 4 மணித்தியால பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

போக்குவரத்துக் கொடுப்பனவு, மருந்துப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்தல், இலவச சுகாதார சேவைகளை தனியார் மயமாக்குவதற்கு எதிர்ப்பு, அதிகரித்துள்ள வங்கி வட்டி விகிதத்தைக் குறைத்தல், கடுமையான ஊழியர் பற்றாக்குறை போன்ற கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

கொழும்பு தேசிய வைத்தியசாலை உட்பட நாடளாவிய ரீதியில் உள்ள வைத்தியசாலைகளில் இந்த 4 மணித்தியால வேலை நிறுத்தம் அமுல்படுத்தப்பட்டது.

# முஸ்லிம் பெரும்பான்மைச் சபைகள் அனைத்தையும் மு.கா. கைப்பற்றும்

## யஹியாகான் உறுதி



(சாய்ந்தமருது நிருபர்)

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் அனைத்து உள்ளூராட்சி சபைகளையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸே கைப்பற்றும் - என அக்கட்சியின் பிரதி பொருளாளர் ஏ.சி.யஹியாகான் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் திட்டமிட்டபடி நடைபெறுமாயின் மு.காவின் அபரிதமான வெற்றி தவிர்க்க முடியாத ஒன்றாக மாறும். முஸ்லிம் காங்கிரஸ் எமது தாய்க்கட்சி, அந்தக் கட்சி மட்டும்தான் முஸ்லிம்களின் கட்சி என்பதை உணர்ந்த பலர் இன்று கட்சியோடு மீளிணைந்து வருகின்றனர்.

முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் பல விட்டுக்கொடுப்புகளுடன் கட்சியைப் பலப்படுத்தி வருகின்றார். கல்முனை மாநகர சபை தேர்தல் விடயம் நீதிமன்றம் வரை சென்றுள்ளதால், இப்பகுதி மு.கா. போராளிகள் மாவட்டத்தின் ஏனைய சபைகளுக்கான தேர்தல் விடயத்தில் கரிசனையோடு செயற்படுவார்கள் என்ற நம்பிக்கை உண்டு.

முஸ்லிம்களின் கட்சி என்று தம்மைத்தாமே மார்தட்டிக்கொள்ளும் ஓரிரு கட்சிகள் இன்றைய சூழ்நிலையில் வலுவிழந்து உட்பூசல் அதிகரித்து, வேட்பாளரின்றி திணறிக்கொண்டிருக்கின்றன. இந்நிலையில், அக்கட்சிகள் மீது, அக்கட்சிகளின் ஆதரவாளர்களே அதிருப்தியடைந்த நிலையில் காணப்படுகின்றனர்.

இவ்வாறான நிலையில் மு.கா. மட்டுமே பூரணமாக வேட்பாளர்களை நியமித்து வேட்புமனுக்களையும் தாக்கல் செய்துள்ளது.

எனவே, உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்திலுள்ள அனைத்து முஸ்லிம் பெரும்பான்மைச் சபைகளையும் கைப்பற்றுவது மட்டுமன்றி மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலும் இச்சாதனை நிலைநாட்டப்படும் என்பதை உறுதிப்படுத்துகிறேன் என்று சுட்டிக்காட்டினார்.

# கிழக்கு மாகாணத்தில் தேசிய காங்கிரஸ் போட்டி

(திராய்க்கேணி நிருபர்)

கிழக்கு மாகாணத்தில் பாராளுமன்ற உறுப்பினர் அதாவுல்லாஹ் தலைமையிலான தேசிய காங்கிரஸ் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதாக கட்சியின் உயர்பீட உறுப்பினரும் அம்பாறை மாவட்ட தேசிய காங்கிரஸ் செயலாளருமான எஸ்.ஏ.பாயிஸ் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்று மாநகர சபை உட்பட ஆறு பிரதேச சபைகளிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தான்குடி, ஏறாவூர் நகர சபை மற்றும் கோரளைப்பற்று வடக்கு பிரதேச சபையிலும் திருகோணமலை மாவட்டத்தில் ஆறு சபைகளிலும் போட்டியிடுகின்றது.

இது தவிர அக்குறனை, பாததும்பர (மடவளை) பிரதேச சபைகளிலும் போட்டியிடுகின்றது - என்றார்.

# மாணவர்களுக்கான போசணை குறித்து தென்கிழக்குப் பல்கலையுடன் கலந்துரையாடல்



நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியால் மாணவர்கள் போசாக்கு தொடர்பான பிரச்சினைகளை எதிர்கொள்ளும் நிலைமை தோன்றலாம் என்ற அடிப்படையில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, மாணவர்களின் போசணை தொடர்பான செயற்றிட்டத்தை தேசிய ரீதியாக முன்னெடுப்பதற்கான பிரேரணை ஒன்றை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்திருந்தது.

அதன் தொடர்ச்சியான செயல்பாடுகளின் ஓர் அங்கமாக கல்முனை பிராந்திய ஆயுர்வேத பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.ஏ.நபீலால் மாணவர்களுக்கான போசணை திட்டத்தை முன்னெடுப்பதற்கு இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் கலந்துரையாடல் ஒன்று ஒருங்கிணைப்பு செய்யப்பட்டது.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்பப் பீட பீடாதிபதி யூ.எல்.அப்துல் மஜீத் தலைமையிலான துறைசார் நிபுணர்கள் மற்றும் விரைவுரையாளர்களும், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.ரிபாஸ் தலைமையில் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் எ. பி.ஏ.வாஜித், வைத்தியர் டீ.எஸ்.ஆர்.டீ.ரஜப், சுகாதார தகவல் முகாமைத்துவப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் ஐ.எம்.முஜீப், உயிரியல் மருத்துவப் பொறியியலாளர் இஹ்பாம், ஆயுர்வேத உற்பத்திப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி மற்றும் ஏனைய ஆயுர்வேத பொறுப்பு வைத்திய அதிகாரிகளும் இந்நிகழ்வில் பங்குபற்றியிருந்தார்கள்.

இக்கலந்துரையாடலின்போது துறைசார் நிபுணர்களின் நிபுணத்துவத்தின் ஊடாக தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்ற போசணை மிகுந்த பிஸ்கட்டுகள் மற்றும் போசணை தூள்கள் என்பவற்றை மேலும் நவீனத்துவப்படுத்தி அதனை சந்தைப்படுத்துவதற்கும் விநியோகிப்பதற்குமான மேலதிக பயிற்சிகளை பெறுவதற்கும் இக்கலந்துரையாடலின்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப் பணிமனைக்கான புதிய பணிப்பாளர்

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப் பணிமனைக்கான புதிய பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள எஸ்.எம்.எம்.அமீர் நேற்று (23) உத்தியோகபூர்வமாகக் கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

இக்கல்வி வலயத்தின் பணிப்பாளராக கடந்த நான்கு வருடங்கள் பணிபுரிந்த வைத்தியர் செய்யித் உமர்மௌலானா, சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளராகவும், சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளராகவும் கடமையிலிருந்த எஸ்.எம்.எம்.அமீர் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்திற்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிகழ்வில் பிரதி கல்விப் பணிப்பாளர்கள் உதவி கல்விப் பணிப்பாளர்கள் உள்ளடங்கலாக கல்விப் பணிமனையின் அனைத்து உத்தியோகத்தர்களும் சம்மாந்துறை வலயத்தின் கல்வியதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

# ‘அறிவுச்சுடர்’ போட்டியில் கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரிக்கு முதலிடம்

(பெரியநீலாவணை நிருபர்)

கல்முனை தொகுதி முன்னாள் அமைச்சர் ஏ.ஆர்.மன்சூரின் பணிகளை தொட்டுச்செல்லும் ஏ. ஆர். மன்சூர் பவுண்டேஷனின் அனுசரணையில் அறம் வலையமைப்பு நடத்திய மாபெரும் ‘அறிவுச்சுடர்’ போட்டித் தொடரின் பரிசளிப்பு விழாவும், கலை நிகழ்ச்சியும் அந்நிறுவனத்தின் தலைவியும் அவுஸ்திரேலிய முஸ்லிம் கவுன்சில் தலைவியும் மன்சூரின் புதல்வியுமான சட்டத்தரணி மர்யம் மன்சூர் நளிமுடீன் தலைமையில் அண்மையில் சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலய கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கல்முனை கல்வி வலயத்துக்கு உட்பட்ட எட்டு தேசிய பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட ‘அறிவுச்சுடர்’ போட்டித் தொடரில் புள்ளிகள் அடிப்படையில் முன்னிலை வகித்த முதல் மூன்று பாடசாலைகளின் மாணவ குழுக்களுக்கு வெற்றிக்கிண்ணங்கள், பணப்பரிசில்கள் மற்றும் சான்றிதழ்களும் வழங்கப்பட்ட அதேவேளை, சுற்றுத்தொடரில் பங்குகொண்ட பாடசாலைகளுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

நிகழ்வில் அறம் வலையமைப்பின் ஸ்தாபகர் வைத்தியர் சிஹாபுடீன் நளிமுடீன், கல்முனை மாநகர சபையின் பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூர், கல்முனை கல்வி வலயக் கணக்காளர் வை.ஹபீபுல்லா, பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஜிஹானா ஆலிப், சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.எல்.சம்சுதீன், தென்கிழக்குப் பல்கலைக்கழக பேராசிரியர் சபீனா இம்தியாஸ், கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி அதிபர் அருட்சகோதரர் எஸ்.சந்தியாகு, அல்-ஹிலால் வித்தியாலயத்தின் அதிபர் யு.எல்.நசார் மற்றும் பாடசாலைகளின் அதிபர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஏ.ஆர்.மன்சூர் பவுண்டேஷன் அமைப்பின் உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

நிகழ்வின்போது சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலயத்துக்கு ஏ.ஆர்.மன்சூர் பவுண்டேஷனால் போட்டோகொப்பி இயந்திரம் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com









கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சை நேற்று ஆரம்பிக்கப்பட்டிருந்த நிலையில், கல்முனை கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகள் மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மட்டக்களப்பு, மட்டக்களப்பு மத்தி, மண்முனை மேற்கு, கல்குடா மற்றும் பட்டிருப்பு கல்வி வலயங்களில் மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். பரீட்சை நடவடிக்கைகளுக்கு பொலிஸார் பாதுகாப்பு உதவிகளையும் வழங்கியிருந்தார்கள். (படங்கள் - பெரியநீலாவணை, கல்லடி நிருபர்கள்)

# அவுஸ்திரேலிய ஓபனில் சாதனை படைத்த பார்வையாளர்கள்

(ரமணி)

அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸின் முதல் வாரத்தில் மொத்தம் 5,34,528 பார்வையாளர்கள் மெல்போர்ன் பூங்காவிற்கு வந்துள்ளதாகவும் மேலும் 94,000இற்கும் அதிகமானோர் தினசரி வருகை தருவதாகவும் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை மூன்றாவது சுற்று ஆட்டத்தை மொத்தம் 94,854 பேர் பார்த்துள்ளனர், 2020ஆம் ஆண்டு கிராண்ட்ஸ்லாம் போட்டியின் ஆறாவது நாளில் 93,709 பேர் பார்வையிட்டனர். பகல் அமர்வில் 60,457 பேர் கலந்து கொண்டதுடன், இரவு அமர்வை 34,397 பேர் பார்த்துள்ளனர். அவுஸ்திரேலிய ஓபனில் ஒரு இரவு அமர்வுக்கான முந்தைய சாதனை 2012இல் 28,377 ஆகும்.



ஒன்பது முறை ஆடவர் ஒற்றையர் பிரிவில் வெற்றிபெற்ற செர்பியாவின் நோவக் ஜோகோவிச், நேற்று ராட் லேவர் அரங்கில் நடந்த இரவு அமர்வில் பல்கேரியாவின் கிரிகோர் டிமிட்ரோவை தோற்கடித்தார், அதேசமயம் மார்கரெட் கோர்ட் அரங்கில் ஸ்பெயினின் ராபர்டோ பாடிஸ்டா அகுட்டிடம் ஐந்து முறை இறுதிப் போட்டியாளராக இருந்த பிரிட்டனின் சர் ஆண்டி முர்ரே தோல்வியடைந்தார்.

அவுஸ்திரேலிய ஹோம் பேவரிட் அலெக்ஸ் டி மினௌர், பிரான்ஸின் பெஞ்சமின் போன்சியை ராட் லேவர் அரினாவில் தோற்கடித்தார், அதேநேரத்தில் பெண்கள் ஒற்றையர் ஒலிம்பிக் சம்பியனான சுவிட்சர்லாந்தின் பெலிண்டா பென்சிக் இத்தாலியின் கமிலா ஜியோர்ஜியை வீழ்த்தினார்.

உக்ரைனில் நடந்த போரின் காரணமாக நடுநிலை வகிக்கும் பெலாரஷ்ய வீராங்கனையான அரினா சபலென்கா, பெல்ஜியத்தின் எலிஸ் மெர்டென்ஸுக்கு எதிராக வெற்றிபெற்ற நாள் அமர்வில் மற்ற நட்சத்திரங்களில் ஒருவராக இருந்தார்.

ஞாயிற்றுக்கிழமை போட்டியை 39,275 ரசிகர்கள் பார்த்துள்ளனர், மேலும் இரவு அமர்விற்கான 23,338 பேர் 2020ஆம் ஆண்டில் 18,480 என்ற மத்திய ஞாயிற்றுக்கிழமையின் முந்தைய சாதனையை எளிதாக முறியடித்தனர்.

இதன்மூலம் அவுஸ்திரேலிய ஓபனின் முதல் வாரத்தில் மொத்தம் 5,34,528 ரசிகர்கள் பதிவாகியுள்ளது.

முதல் வாரத்தில் முறியடிக்கப்பட்ட மற்ற வருகைப் பதிவுகள், முதல் வெள்ளிக்கிழமைக்கான மொத்த வருகைப் பதிவுகள், வாயில்கள் வழியாக 85,488 பேர். 2020ஆம் ஆண்டு பார்வையாளர்களை விட 18 பேர் அதிகமாகும். தொடக்க நாள் மொத்தம் 77,944 பார்வையாளர்கள். முன்னைய சாதனை 2017இல் 72,424 பேர்.

கொவிட்-19 வருகைக் கட்டுப்பாடுகள் இல்லாமல் 2020இற்குப் பிறகு இந்த ஆண்டு அவுஸ்திரேலியன் ஓபன் நடத்தப்பட்டது. 14 நாட்களில் மொத்தமாக 9,00,000 ரசிகர்களின் வருகையை அமைப்பாளர்கள் எதிர்பார்க்கின்றனர்.

ADA derana
SPORTS
#GAMEON
YouTube SUBSCRIBE
ADA derana 24

# இந்தியாவிடம் படுதோல்வியடைந்த இலங்கைக்கு அரையிறுதி வாய்ப்பு இல்லை!

## இன்று தென்னாபிரிக்காவுடன் பலப்பரீட்சை

(ஏ. அகீல் சிஹாப்)

ஐ.சி.சி. 19 வயதுக்குட்பட்ட மகளிர் இருபதுக்கு 20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடர் தென்னாபிரிக்காவில் நடைபெற்றுவரும் நிலையில், சுப்பர் 6 சுற்றில் முதல் ஆட்டத்தில் இந்திய அணியை எதிர்கொண்ட இலங்கை மகளிர் அணி படுதோல்வியடைந்தது. இதன் காரணமாக இலங்கை அணி அரையிறுதிக்கு தகுதிபெறும் வாய்ப்பு இல்லாமல் போயுள்ளது.

முதல் சுற்றில் ‘ஏ’ குழுவில் இடம்பெற்ற இலங்கை, ஐக்கிய அமெரிக்காவை வெற்றிகொண்டதன் மூலம் சுப்பர் 6 சுற்றில் விளையாட தகுதிபெற்றது. ஆனால், குழு-1க்கான சுப்பர் சிக்ஸ் சுற்றில் இந்தியாவிடம் படுதோல்வி அடைந்த இலங்கை, அரையிறுதி வாய்ப்பை கிட்டத்தட்ட இழந்துவிட்டது.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 59 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.



பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய இளையோர் அணி 7.2 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 60 ஓட்டங்களைப் பெற்று இலகுவாக வெற்றியீட்டியது.

இலங்கை அணி இன்று தென்னாபிரிக்க மகளிர் அணியை எதிர்கொள்கிறது. இந்த ஆட்டத்தில் வெற்றிபெற்றாலும் அரையிறுதி வாய்ப்பு இல்லையென்றே சொல்லாம். காரணம், இலங்கை அணிக்கு வெறும் 2 புள்ளிகளே கிடைக்கும்.

# சவூதி மண்ணில் முதல் வெற்றியை ருசித்த ரொனால்டோ

சவூதி ப்ரோ லீக் உதைபந்து போட்டியில் ரொனால்டோ தலைமையிலான அல்-நாசர் அணி 1-0 என்ற கோல் கணக்கில் அல்-எட்டிபாக் அணியை வீழ்த்தி அபார வெற்றிபெற்றது.

பிரபல கால்பந்து ஜாம்பவான் கிறிஸ்ரியானோ ரொனால்டோ மான்செஸ்டர் அணி நிர்வாகத்துடன் ஏற்பட்ட பிளவு பிறகு, தனது 173 மில்லியன் மதிப்புள்ள புதிய ஒப்பந்தத்துடன் சவூதி அரேபியாவின் அல்-நாசர் கிளப்புடன் இணைந்தார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் சவூதி ப்ரோ லீக் உதைபந்து போட்டியில் அல்-எட்டிபாக் அணிக்கு எதிரான போட்டியில் தனது புதிய கிளப்பான அல்-நாசர் அணிக்காக கிறிஸ்ரியானோ



ரொனால்டோ தனது முதல் போட்டியில் களமிறங்கினார். அத்துடன், இந்தப் போட்டியில் கிறிஸ்ரியானோ ரொனால்டோ அல்-நாசர் அணியின் கேப்டனாகவும் களமிறக்கப்பட்டார்.

ரொனால்டோ களமிறங்கிய முதல் போட்டியிலேயே அல்-நாசர் அணி 1-0 என்ற கோல் கணக்கில் அல்-எட்டிபாக் அணியை வீழ்த்தி வெற்றிபெற்றது. இந்த ஆட்டத்தில் 31ஆவது நிமிடத்தில் பிரேஸிலின் முன்கள வீரர் ஆண்டர்சன் தலிஸ்கா முதல் கோல் அடித்து அல்-நாசர் அணியை முன்னிலைப்படுத்தினார். ஆட்டத்தின் இறுதி நொடி வரை அல்-எட்டிபாக் அணியால் கோல் அடிக்க முடியாததால் ஆட்டநேர முடிவில் அல்-நாசர் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

# இளைஞன் தூக்கிட்டுத் தற்கொலை

## மாவடிமும்மாரி பிரதேசத்தில் சம்பவம்

(மண்டூர் நிருபர்)

கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாவடி முன்மாதிரி பிரதேசத்தில் இளைஞர் ஒருவர் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் நேற்று முன்தினம் (22) இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பத்தரைக்குளம் மாவடி முன்மாதிரி பிரதேசத்தைச் சேர்ந்த 19 வயதுடைய நடராஜா சதுஷன் என்பவரே இவ்வாறு தூக்கிட்டுத் தற்கொலை செய்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவர், சம்பவ தினத்திற்கு முதல் நாள் தனது வீட்டாருடன் உரையாடிக் கொண்டிருந்த பின்னர் தனது படுக்கை அறைக்கு சென்றுள்ளதுடன், நேற்று முன்தினம் காலையில் அவர் எழுந்திருக்காத நிலையில் அவரின் அறை பூட்டப்பட்டு இருந்ததாகவும் பின்னர் வீட்டார் வீட்டின் ஜன்னலை உடைத்து உட்சென்றபோது அவர், தனக்குத்தானே தூக்கிட்ட நிலையில் இருந்ததாகவும் பொலிஸார் மற்றும் மரண விசாரணை அதிகாரியின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்ற பதில் நீதிவானின் உத்தரவுக்கமைவாக சம்பவ இடத்துக்குச் சென்று மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தை பார்வையிட்ட பின்னர், பிரேத பரிசோதனையின் பின்னர் நெருங்கிய உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

சம்பவம் பற்றிய மேலதிக விசாரணைகளை கொக்கட்டிச்சோலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# முதல் மூன்று வாரங்களில் 337 டெங்கு நோயாளர்கள் அடையாளம்

## கல்முனையில் 247 நோயாளர்கள் பாதிப்பு

## விழிப்புணர்வுடன் செயற்படுமாறு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் எச்சரிக்கை

(கல்குடா நிருபர்)

கிழக்கு மாகாணத்தில் ஜனவரி மாதத்தின் இதுவரையான காலப்பகுதியில் 337 டெங்கு நோயாளர்கள் அடையாளங் காணப்பட்டுள்ளதாகவும் கல்முனையில் மாத்திரம் 247 டெங்கு நோயாளர்கள் அடையாளங்காணப்பட்டுள்ளதாகவும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு அறிவித்துள்ளது.



அதற்கமைய, கல்முனையில் 247 பேரும், திருகோணமலையில் 23 பேரும், அம்பாறையில் 14 பேரும், மட்டக்களப்பில் 53 பேருமே டெங்கு நோயால் பாதிப்படைந் துள்ளனர்.

இதேவேளை, ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவில் டெங்கு நோயாளர்களைக் கட்டுப்படுத்தும் வகையில் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.எச்.எம்.தாரிக்கின் வழிகாட்டலில் பல்வேறு வேலைத்திட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

நேற்று (23) ஓட்டமாவடி 208/பி கிராம சேவகர் பிரிவில் கடந்த இரண்டு வாரங்களில் மூன்று டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டதையடுத்து அப்பகுதிக்குப் பொறுப்பான பொதுச் சுகாதாரப் பரிசோதகர் யூ.எல்.எம்.ஜின்னாவின் தலைமையில் வீடுவீடாகச் சென்று டெங்கு குடம்பிகள் உள்ள இடங்களைப் பார்வையிட்டு அதனை அகற்றியதுடன், பொதுமக்களுக்கு டெங்கின் தாக்கம் தொடர்பாகவும் தெளிவு படுத்தப்பட்டது. இதன்போது 134 வீடுகள் பரிசோதிக்கப் பட்டதுடன், அதில் 05 வீட்டு உரிமையாளர் களுக்கெதிராக எச்சரிக்கையும் விடப்பட்டதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர் யூ.எல்.எம்.ஜின்னா தெரிவித்தார்.

வீடுகளை பரிசோதிக்கும் வேலைத்திட்டத்தில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஏ.கே.ஜவ்பர், ஓட்டமாவடி 208/பி கிராம சேவகர் பிரிவின் சனசமுக நிலைய அங்கத்தவர்களும் கலந்து கொண்டனர். இந்நிலையில், டெங்கு நோய் தொடர்பில் மக்களை விழிப்புணர்வுடன் செயற்படுமாறும் சுகாதாரப் பரிசோதகர்கள் கோரியிருக்கிறார்கள்.

# போடியார் புலம்பல்!



**தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு சம்பந்தர் தலைவர் இல்லையாம் இனி புதிய தலைவர தெரிவுசெய்யப்போறாங்களாம் எண்டு அந்த டுப்பிளிகேட் (DTNA) யில உள்ள ரெலோ பேச்சாளர் பொடியன் சொல்லியருக்காரு எலுவா..?**

**சரிடாம்பி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கிற காலம் 2001 தொடக்கம் 2010 வரையும் உன்னையும், புளொட் கட்சியையும் அப்போது காணல்லையே.. எங்கடா அப்ப புலிக்கு பயந்து ஒளிச்சு இருந்த நீங்க அதயும் ஒள்ளுப்பம் சொல்லன் பாப்பம்!**

# மட்டக்களப்பில் 145 வேட்புமனுக்கள் தாக்கல்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளூராட்சிமன்ற தேர்தலுக்காக அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக்குழுக்கள் என்ற அடிப்படையில் 145 வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆவற்றில்; 2 அரசியல்கட்சிகளிதும் 4 சுயேட்சை குழுக்களினதும் மனுக்கள் உள்ளடங்களாக 6 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட உதவி தெரிவத்தாட்சி அதிகாரி எம்.பி.எம். சுபியான் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மட்டக்களப்பு மாநகரசபைக்கும் நகரசபைகளான காத்தான்குடி, ஏறாவூர் மற்றும் பிரதேச சபைகளான ஓட்டமாவடி, வாகரை, வாழைச்சேனை, கிரான், ஏறாவூர், வவுணதீவு, களுவாஞ்சிக்குடி, வெல்லாவெளி, கொக்கட்டிச்சோலை ஆகிய 12 உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்பு மனுதாக்கல்; கடந்த 21ஆம் திகதி பகல் 12 மணியுடன் நிறைவடைந்திருந்தது.

இதில் தமிழரசு கட்சி, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி, தமிழ் தேசிய மக்கள் முன்னணி, ஐக்கிய தேசிய கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈழமக்கள் ஜனநாயக கட்சி, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் தேசிய கூட்டமைப்பு உட்பட பல கட்சிகள் மற்றும் சுயேட்சை குழுக்கள் உள்ளடங்களாக 145 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இதில் கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபையில் ஐக்கிய முன்னணி கட்சியும் சுயேட்சைக்குழு ஒன்றும், கோறளைப்பற்று வடக்கில் 2 சுயேட்சைக்குழுவும், மண்முனைபற்று பிரதேச சபையில் ஒரு சுயேட்சைக்குழுவும், கோறளைப்பற்றில் ஜனநாயக மக்கள் காங்கிரஸ் கட்சியுமாக 2 கட்சிகளும் 4 சுயேட்சைக்குழுவுமாக 6 வேட்பு மனுக்கல் நிராகரிக்கப்பட்டுள்ளன.

வேட்புமனுவில் கோறளைப்பற்று பிரதேச சபையில் விமலசேன லவக்குமார் தலைமையிலான சுயேட்சைக்குழுவில் ஒருவரும், கோறளைப்பற்று வடக்கில் அகில இலங்கை தமிழர் மகாசபை 2 பேரும், காத்தான்குடி நகரசபையில் ஐக்கிய காங்கிரஸ் கட்சி வேட்பாளர் பட்டியலில் ஒரு வேட்பாளரும், அதே நகர சபையில் தேசிய காங்கிரஸ் 11 வேட்பாளர்களும், மட்டக்களப்பு மாநகர சபையில் ஐக்கிய தேசிய கட்சி வேட்பாளர் பட்டியில் இருந்து 9 பேரும், மண்முனை தென்மேற்கு பிரதேச சபையில் தமிழர் விடுதலைக் கூட்டணியில் ஒருவரும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சார்பில் 3 வேட்பாளர்களும் நிராகரிக்கப்பட்டுள்ளன என்றார்.

இதேவேளை, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனை கட்சிகள் மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிடுவதற்காக தேர்தல் திணைக்களத்தில் கட்டுப்பணம் செலுத்திய நிலையில், வேட்பு மனுதாக்கல் கடைசி தினமான 21ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முடிவடைகின்ற நிலையில் ஸ்ரீ லங்கா சுதந்திரகட்சியினர் வேட்பு மனுதாக்கல் செய்வதற்கு 12.15 மணிக்கு கச்சேரிக்கு வந்திருந்தபோதும் உள்நுழைவதற்கு அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை.

அதேவேளை ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சி வேட்பாளர் பட்டியல் தயாரித்து அதனை கொழும்பில் இருந்து அன்றைய தினம் மட்டக்களப்பை நோக்கி பிரயானித்த நிலையில் வாகனம் விபத்தின'; காரணமாக, 2 மணிக்கே கச்சேரிக்கு வரமுடிந்த காரணத்தினால் அவர்கள் வேட்பு மனுதாக்கல் செய்யமுடியாமல் போயுள்ளதாக கட்சியின்மாவட்ட அமைப்பாளர் சந்திரகுமார் குறிப்பிட்டார்.

# திருமலையில் 162 வேட்புமனுக்கள் தாக்கல்!

## அவற்றில் 08 மனுக்கள் நீக்கப்பட்டுள்ளதாக மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் அறிவிப்பு

(திருமலை நிருபர்)

நாட்டில் இடம்பெறவிருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் இதுவரை 162 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் 08 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும் திருகோணமலை மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளரும் மாவட்ட உள்ளூர் அதிகாரசபைகளுக்கான தெரிவத்தாட்சி அலுவலருமான ஆர்.சசீலன் தெரிவித்தார்.

அதன்படி, தருகோணமலை மாவட்டத்தில் 13 உள்ளூராட்சி சபைகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட 22 அரசியல் கட்சிகள் உள்ளடங்கலாக 22 சுயேச்சைக் குழுக்கள் உட்பட 178 வேட்புமனுக்களுக்கான கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் இவற்றுள் 162 வேட்புமனுக்கள் தாக்கல் செலுத்தப்பட்டதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்களில் 07 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளினதும் சுயேச்சை குழுவொன்றினதும் வேட்புமனுக்கள் உள்ளடங்கலாக 8 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

திருகோணமலை மாநகர சபைக்கு 15 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளும் 04 சுயேச்சை குழுக்களும் வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ளன. இவற்றுள் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் வேட்புமனு உரிய பெண் வேட்பாளர்களின் எண்ணிக்கை இன்மையாலும், ரூபராஜ் ஜனோஜ் தலைமையிலான சுயேச்சைக் குழுவின் வேட்புமனு உரிய நேரத்திற்கு சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாகவும் நிராகரிக்கப்பட்டன.

மேலும், தமிழர் விடுதலை கூட்டணி வேட்பாளர் மிஹ்ராப் இவாத் அகமட்டின் வேட்புமனுவில், வேட்பாளர் அந்தஸ்து சத்தியப்பிரமாண உறுதியுரை இன்மையாலும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி வேட்பாளர்களான நேசதுரை சங்கிர்த்தா, ஜெகநாதன் நவதீசன் ஆகியோர் பூரணமற்ற சத்தியப்பிரமாண உறுதியுரையை வழங்கியமையினாலும் அவர்களின் வேட்பாளர் அந்தஸ்தும் நிராகரிக்கப்பட்டன. இதன்படி திருகோணமலை மாநகர சபைக்கு மொத்தமாக 473 வேட்பாளர்கள் களமிறங்கவுள்ளனர்.

மேலும் கிண்ணியா நகர சபைக்காக 13 அரசியல் கட்சிகள் மாத்திரம் வேட்புமனுக்களை தாக்கல் செய்திருந்தன. இவற்றுள் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி தாக்கல் செய்த வேட்புமனு உரிய பெண் வேட்பாளர் இன்மை காரணமாக நிராகரிக்கப்பட்டது. இங்கு போட்டியிடும் மொத்த வேட்பாளர்களின் எண்ணிக்கை 192 ஆகும்.

வெருகல் பிரதேச சபைக்காக 13 அரசியல் கட்சிகள் வேட்புமனுக்களை சமர்ப்பித்தன. இச்சபைக்கு வேட்புமனுக்களை தாக்கல் செய்த அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் வேட்பாளர் அப்துல்லா அஸீராவின் வேட்பாளர் அந்தஸ்து சத்தியப்பிரமாண உறுதியுரை இன்மை காரணமாக நிராகரிக்கப்பட்டது. இங்கு 207 வேட்பாளர்கள் களமிறங்குகின்றனர்.

சேருவல பிரதேச சபைக்கு 10 அரசியல் கட்சிகள் வேட்புமனுக்களை தாக்கல் செய்திருந்தன. இதில் இலங்கை தமிழரசுக் கட்சி தாக்கல் செய்த வேட்புமனு உரிய பெண் வேட்பாளர் இன்மை காரணமாக நிராகரிக்கப்பட்டது. இங்கு 171 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

கந்தளாய் பிரதேச சபைக்கு 13 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. இதனுள் இரண்டு சுயேச்சைக் குழுக்களும் உள்ளடங்கும். இச்சபைக்காக வேட்புமனுத் தாக்கல் செய்த அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் வேட்புமனு உரிய பெண் வேட்பாளர்களின் எண்ணிக்கை இன்மை காரணமாகவும் சுதந்திர ஐக்கிய முன்னணியின் வேட்புமனு வேட்பாளர்களின் எண்ணிக்கை பூரணப்படுத்தப்படாமை காரணமாகவும் நிராகரிக்கப்பட்டன. இச்சபைக்கு 264 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

மொரவெவ பிரதேச சபைக்கு 07 வேட்புமனுக்கள் தாக்கல்செய்யப்பட்டன. இங்கு மொத்தம் 133 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

கோமரங்கடவெல பிரதேச சபைக்கு 05 அரசியல் கட்சிகளின் வேட்புமனுக்களும் பதவிசிறீபுர பிரதேச சபைக்கு 07 அரசியல் கட்சிகளும் வேட்புமனுக்களை தாக்கல் செய்தன. இங்கு போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை முறையே 95 ஆயிரத்து 133 ஆகும்.

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபைக்கு 16 அரசியல் கட்சிகளும் 05 சுயேச்சை குழுக்களும் வேட்புமனுக்களை தாக்கல் செய்தன. இவற்றுள் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் வேட்புமனுவில் கட்சியின் பெயர், இடத்தில் குறிப்பிடப்படாமை காரணமாக வேட்புமனு நிராகரிக்கப்பட்டது. மேலும் தமிழர் சமூக ஜனநாயக கட்சியின் காளிராசா ராஜூ மற்றும் சங்கித்தா மோகனதாசின் வேட்பாளர் அந்தஸ்து பூரணமற்ற சத்தியப்பிரமாணம் காரணமாக நிராகரிக்கப்பட்டது. இச்சபைக்காக 418 வேட்பாளர்கள் களமிறங்குகின்றனர்.

குச்சவெளி பிரதேச சபைக்காக 16 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இதில் இரண்டு சுயேச்சை குழுக்களும் அடங்கும். அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் வேட்புமனு உரிய எண்ணிக்கையான வேட்பாளர் இன்மை காரணமாக நிராகரிக்கப்பட்டது. இங்கு போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை 285 ஆகும்.

தம்பலகாமம் பிரதேச சபைக்காக 11 வேட்புமனுக்கள் அரசியல் கட்சிகளால் தாக்கல் செய்யப்பட்டன. இங்கு மொத்தம் 209 வேட்பாளர்கள் களமிறங்குகின்றனர்.

மூதூர் பிரதேச சபைக்கு 15 அரசியல் கட்சிகளும் 03 சுயேச்சை குழுக்களும் உள்ளடங்கலாக 18 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இங்கு போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை 456 ஆகும்.

கிண்ணியா பிரதேச சபைக்கு 09 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இச்சபைக்கு வேட்புமனு தாக்கல் செய்த ஐக்கிய தேசிய கட்சியின் வேட்பாளர் அன்சார் இஜாஸ் பூரணமற்ற சத்தியப்பிரமாணம் காரணமாக வேட்பாளர் பட்டியலில் அவரின் பெயர் நிராகரிக்கப்பட்டது. இங்கு போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை 143ஆகும்.

13 உள்ளூராட்சி சபைகளுக்குமாக 3,179 வேட்பாளர்கள் மொத்தமாக போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது - என்றார்.

# கந்தளாயில் குரங்குகளின் தொல்லை அதிகரிப்பு

## நிலைமையை கட்டுப்படுத்த உதவுமாறு பொதுமக்கள் கோரிக்கை

(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பிரதேச சபைக்குட்பட்ட பேராறு, பேராற்று வெளி அணைக்கட்டு, மூன்றாம் கொலனி, மத்ரஸா நகர், ரஜ-எல மற்றும் வாத்தியகம போன்ற பிரதேசங்களில் குரங்குகளின் தொல்லை காரணமாக அப்பகுதி மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கள்ளாகி வருவதாக தெரிவிக்கின்றனர்.

கிராமங்களுக்குள் புகும் காட்டுக் குரங்குகள் வீட்டில் வைக்கின்ற பொருட்களைக்கூட தூக்கிச் செல்வதாகவும் நூற்றுக்கும் மேற்பட்ட குரங்குகள் புகுந்து வேளாண்மைப் பயிர்களை சேதப்படுத்துவதோடு பிடுங்கிச் செல்வதாகவும் தெரிவிக்கின்றனர்.

காலையில் வெளியாகின்ற குரங்குகள் மாலை வரை சிரமத்திற்குள்ளாக்குவதாகவும் பொது மக்கள் முறையிடுகின்றனர். அத்தோடு தென்னை மரங்களில் ஒரு குரும்பையைக்கூட விட்டுவைக்காமல் குரங்குகள் அனைத்தையும் சாப்பிடுவதாகவும் சேதப்படுத்தி வருவதாகவும் தெரிவிக்கின்றனர். ஆள் நடமாட்டம் இல்லாத நேரம் பார்த்து வீட்டினுள்ளே புகுந்து சமைத்த உணவுகளைக்கூட விட்டுவைப்பதில்லை எனவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்தோடு வாழைமரம், மாமரம் ஒன்றையும் விட்டுவைப்பதில்லை எனவும் கடும் கஷ்டமாக இருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதற்குரிய அதிகாரிகள் கவனத்தில் எடுத்து குரங்குகளின் தொல்லையிலிருந்து பாதுகாத்து தருமாறு அப்பகுதியில் வசிக்கும் மக்கள் கேட்டுக்கொள்கின்றனர்.


# செலான் வங்கி பீ.எல்.சி.

1990 ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09ஆம் பிரிவின் கீழ் நடைபெறும் ஏலவிற்பனை

**செலான் வங்கி (பீ.எல்.சி.) - கெக்கிராவ கிளை**
**பெறுமதிமிக்க இடம் ஒன்றின் பிரசித்த ஏலவிற்பனை**

தம்புள்ளயில் பதிவு செய்யப்பட்ட அலுவலகமொன்றினைக்கொண்ட மற்றும் PV 109727 என்ற பதிவிலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்ட விதிகளின்கீழ் இலங்கையில் ஒருங்கிணைக்கப்பட்ட கம்பனியொன்றான **சிட்டி டைல் ஹோம் (பிரைவேட்) லிமிடெட் மற்றும் தம்புள்ளயில் வசிக்கும் ரத்நாயக்க முதியன்சேலாகே சுரங்க ரத்நாயக்க மற்றும் ரத்நாயக்க முதியன்சேலாகே சஞ்ஜீவ ரத்நாயக்க** என்பவர்கள் **''கடப்பாட்டாளர்களாகவும் / ஈடுவைத்தவர்களாகவும்''** என்ற வகையில் கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள். ஆதலால் செலான் வங்கி பீ.எல்.சியின் சார்பாக **பிரசித்த நொத்தாரிசு கே.கே.டபிள்யூ.சாமரசிங்ஹ** என்பவரினால் 2016.09.06ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1458ஆம் இலக்க ஈட்டுமுறி மற்றும் 2017.03.06ஆம் திகதி 1502ஆம் இலக்க ஈட்டு முறி மற்றும் 2017.03.06 ஆம் திகதி 1504ஆம் இலக்க ஈட்டு முறி மற்றும் 2017,08.09ஆம் திகதி 1561 ஆம் இலக்க ஈட்டு முறி மற்றும் 2018.09.04ஆம் திகதி 1654ஆம் இலக்க ஈட்டு முறிகளின் கீழ் செலான் வங்கி பீ.எல்.சியில் அடகுவைக்கப்பட்ட இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணி மற்றும் அதன் சுற்றுச்சூழலானது.

**2023ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21ஆம் திகதி கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களின் செலான் வங்கி பீ.எல்.சியினால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்குட்பட்டு செலான் வங்கி பீ.எல்.சி இல. 90, காலி வீதி, கொழும்பு 03 இல் உள்ள வங்கியின் வளாகத்தில் என்.மூலம் பகிரங்க பொது ஏல விற்பனையில் விற்கப்படும்.**

**1ஆவது ஏலவிற்பனை - மு.ப. 11.15 மணிக்கு**

**அட்டவணை**

மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டத்தில், மாத்தளை வடக்கு தம்புள்ள பிரதேச செயலாளர் பிரிவிற்குள் ஈ-445 ஆம் இலக்க கிராம சேவகர் பிரிவிற்குள் வக பனஹாபல்லே சியபத்துவே, மிரிஸ்கொனியாவ கிராமத்தில் அமைந்துள்ள "அங்கும்புரே ஹங்கேத" என்று அழைக்கப்படும் காணி அமைந்துள்ள இடத்திற்கு உத்தரவ பெற்ற நில அளவையாளரான எஸ்.எம்.ஆரியதாச என்பவரினால் 2013 ஒக்டோபர் மாதம் 08 ஆம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 13398 ஆம் இலக்க நில வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காணியானது லொட் 1 மற்றும் 2 பிரித்து ஒதுக்கப்பட்ட காணியின் அளவானது ஒரு றூட் (ஏ.0.றூ.1-பே.0) விசாலமான காணி கட்டடம், மரங்கள், பயிர் செய்கைகள், மற்றும் அதில் அமைந்துள்ள யாவும் ஆகும்.

பிரசித்த நொத்தாரிசு கே.கே.டபிள்யு. சாமரசிங்ஹ அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2016 செப்டெம்பர் மாதம் 06 ஆம் திகதியிடப்பட்ட 1458 ஆம் இலக்க மற்றும் 2017 மார்ச் மாதம் 06ஆம் திகதியிடப்பட்ட 1504ஆம் இலக்க மற்றும் 2017 ஓகஸ்ட் மாதம் 09 ஆம் திகதியிடப்பட்ட 1561 ஆம் இலக்க மற்றும் 2018 செப்டெம்பர் மாதம் 04 ஆம் திகதியிடப்பட்ட 1654 ஆம் இலக்க ஈட்டு முறிகளின் கீழ் அடகு வைக்கப்பட்டகாணி.

**காணிக்கும் பிரவேசிக்கும் வழி-** தம்புள்ள நகர மணிக்கூட்டு கோபுரம் அருகில் இருந்து அநுராபுர வீதியில் 10 மீற்றர் சென்ற பிறகு வலது பக்கத்திலுள்ள "சிட்டி டைல் ஹோம்" என்ற பெயர் பலகையுடன் இந்த காணி அமைந்துள்ளது.

2 ஆவது ஏலவிற்பனை - மு.ப 11.30 மணிக்கு

**அட்டவணை**

மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டத்தில், வக பனஹாபல்லே சியபத்துவே, தம்புள்ள மாநகர சபை அதிகார பிரிவில் தம்புள்ளை பிரதேச செயலகப் பிரிவில் பொஹொரன்வெவ கிராம சேவகர் பிரிவிற்குள் பதெனிய கிராமத்தில் அமைந்துள்ள "தெமலிதவபு யாய" என்று அழைக்கப்படும் காணி அமைந்துள்ள இடத்திற்கு உத்தரவ பெற்ற நில அளவையாளரான ஆர்.பீ. அபேகோன் என்பவரினால் 2015 ஏப்ரல் மாதம் 20ஆம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 934 ஆம் இலக்க நில வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காணியானது.லொட் டீ பிரித்து ஒதுக்கப்பட்ட காணியின் அளவானது இரண்டு றூட் ஒரு பேர்ச் (ஏ.0.றூ.2-பே.01) அல்லது 0.2025 ஹெக்டேயர் விசாலமான காணி கட்டடம், மரங்கள், பயிர் செய்கைகள், மற்றும் அதில் அமைந்துள்ளயாவும் ஆகும்.பிரசித்த நொத்தாரிசு கே.கே.டபிள்யூ. சாமரசிங்ஹ அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017 மார்ச் மாதம் 06ஆம் திகதியிடப்பட்ட 1502ஆம் இலக்க ஈட்டு முறியின் கீழ் அடகு வைக்கப்பட்ட காணி.

**காணிக்குப் பிரவேசிக்கும் வழி-** தம்புள்ள நகரத்தில் இருந்து குருநாகல் பிரதான வீதியில் 1.90 Km சென்ற பிறகு கல்கிரியாவ வீதி சந்தி சந்திக்கும் வரை சென்ற பிறகு இடது பக்கமாக இந்த காணி அமைந்துள்ளது.

**தீர்மான முழவு அறிவித்தல்கள்:** 2019.09.20 ஆம் திகதிய இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் வர்த்தமானியிலும் 2019.09.25 ஆம் திகதி மவ்பிம, சிலோன் டுடே மற்றும் தினக்குரல் ஆகிய பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**கட்டணங்கள் செலுத்தும் விதம் -** உத்தேச கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரக்குச் செலுத்த வேண்டும்

(1) கொள்வளவு விலையின் 10% (2) உள்ளூராட்சி மன்ற வரி 1%
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 25% (4) விற்பனை நிபந்தனை உறுதிப்படுத்தலுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 3,000/-
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் 2,500/- (6) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்

கொள்முதல் விலையின் 90% வீதத்தையும் மிகுதி, இலங்கை அரசாங்கத்தினாலோ அல்லது வேறு அதிகார சபையினாலோ விதிக்கப்படும் சட்டரீதியான வரி அல்லது கட்டணங்கள் ஏதுமிருப்பின் அவற்றோடு, ஏலத்திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீ.எல்..தாபனத்திற்கு செலுத்துதல் வேண்டும்.மேற்குறிப்பிடப்பட்டவாறு மிகுதிப் பணம் குறிப்பிட்ட திகதிக்கு முன்னால் செலுத்தப்படாதவிடத்து, செலுத்தியபணத்தை திருப்பித் தராமலிருப்பதற்கும் அதே காணியை மறு ஏலவிற்பனை செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

**உரித்துறுதி, ஏனைய ஆவணங்கள் மற்றும். விபரங்களைப் பெற்றுக்கொள்ள கீழ்க்குறிப்பிடப் பட்டுள்ள அதிகாரிகளிடம் விசாரணைகளை மேற்கொள்ளவும். உதவி பொது முகாமையாளர், (சட்டம்), 14 ஆவது மாடி, செலான் வங்கி பீ.எல்.சி. இலக்கம் 90, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி இலக்கங்கள்: 011-2456485, 011-2456473, 011-2456479.**

மேலேயுள்ள ஏலவிற்பனையை எதுவித முன்னறிவித்தலுமின்றி நிறுத்துவதற்கோ அல்லது இரத்துச்செய்வதற்கோ உரிய சகல அதிகாரங்களும் வங்கிக்குண்டு,

**சந்திமா பிரியதர்ஷனீ கமகே,**
**நீதிமன்ற ஆணையாளர்,**
**விலைமதிப்பீட்டாளர்.**
**மற்றும் உரிமம் பெற்ற ஏலதாரர்.**

**இல. 9-i, ஹைலெவல் வீதி,**
**சர்வோதய மாவத்த, பனாகொட, ஹோமாகம.**
**தொலைபேசி இலக்கம்: 071 4318252, 011- 2173282**

த

# உலக செய்திகள்

## உங்கள் ரிக்கெட் தான் உங்கள் விசா

### சவூதியில் 4 நாட்கள்; பல்வேறு பகுதிகளுக்குச் சென்று வரலாம்



''உங்கள் ரிக்கெட் தான் உங்கள் விசா'' என்ற திட்டத்தின்கீழ் 96 மணிநேரம் (4 நாட்கள்) சவூதியின் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று வரலாம் என்ற புதிய சேவை திட்டத்தை சவூதி எயார்லைன்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

சவூதி அரேபிய விமான நிறுவனமான சவூதியா, விமான ரிக்கெட் வைத்திருக்கும் பயணிகள் அதிகபட்சம் நான்கு நாட்களுக்கு (96 மணிநேரம்) சவூதி அரேபியாவின் பல்வேறு பகுதிகளுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவார்கள் என்று உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

உம்ரா, ஹஜ் யாத்திரைக்காக சவூதிக்கு செல்பவர்களுக்கு இந்தப் புதிய திட்டம் பயனளிக்கக்கூடியதாக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இத்திட்டம் குறித்து சவூதியாவின் செய்தித் தொடர்பாளர் தெரிவிக்கையில்,

சவூதி எயார்லைன்ஸில் பயணிகள் ஒன்லைனில் விமான ரிக்கெட்டுகளை முன்பதிவு செய்யும்போது, அவர்களுக்கு விசா தேவையா, இல்லையா என்று கேட்கப்படும். விசா தேவைப்படுபவர்கள் ஆம் என்று குறிப்பிட்டால் போதும் விமான ரிக்கெட்டுடன் விசாவும் சேர்ந்து வந்துவிடும்.

''உங்கள் ரிக்கெட் தான் உங்கள் விசா'' என்ற திட்டத்தின் புதிய வகை விசாவைப் பயன்படுத்தி ஜித்தா விமான நிலையம் மட்டுமன்றி, சவூதியிலுள்ள அனைத்து சர்வதேச விமான நிலையங்களிலும் நீங்கள் இறங்கலாம். பயணங்களை முடித்துக்கொண்டு உங்களுக்கு வசதியான விமான நிலையத்திலிருந்து தாயகம் திரும்பலாம்.

ரிக்கெட் வாங்கும்போது வேறு கட்டணங்கள் எதுவும் செலுத்தாமல் சுற்றுலா விசா வழங்கும் சேவை விரைவில் தொடங்கப்படும். நாட்டிலுள்ள அனைத்து சர்வதேச விமான நிலையங்களுக்கும் இந்த சேவை விரிவுபடுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## பல மணிநேர மின் துண்டிப்பு

# இருளில் மூழ்கியது பாகிஸ்தான்



### பாதிவழியில் நின்ற மின்சார ரயில்கள்; மக்கள் பெரும் அவதி



பாகிஸ்தானில் ஒரேநேரத்தில் பல மணிநேர மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டதால் தலைநகர் இஸ்லாமாபாத் மற்றும் கராச்சி, லாகூர் உட்பட முக்கிய நகரங்களும் பலோசிஸ்தானின் 22 மாவட்டங்களும் இருளில் மூழ்கியுள்ளன. இதனால் பொதுமக்கள் பெரும் இன்னல்களுக்குள்ளாகியுள்ளனர்.

மின்தடையால் பல மின்சார ரயில்கள் பாதி வழியில் நின்றுவிட்டதாகவும், மேம்பாலத்தில் இயக்கப்பட்ட ரயில்களிலிருந்து பயணிகள் இறங்கி நடந்து செல்லும் விடியோக்களும் ட்விட்டரில் வெளியாகி வருகின்றன.

பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக அங்கு மக்கள் கடுமையான இன்னல்களை சந்தித்து வருகின்றனர். உணவுப்பொருள் தட்டுப்பாடு தொடர்ந்து அதிகரித்து வருவதால் அதற்கேற்ப விலையும் தொடர்ந்து உயர்ந்து வருகிறது. விலைவாசி தொடர்ந்து உயர்ந்து வருவதால் மக்களின் வாழ்க்கைத்தரம் சரிந்துகொண்டே வருகிறது.

பாகிஸ்தானின் பஞ்சாப், சிந்து, பலுசிஸ்தான், கைபவர் பக்துன்வா என எல்லா மாகாணங்களிலும் பசியால் வாடும் மக்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் கூடிக்கொண்டே செல்கிறது. இதனால், பொது இடங்களில் விநியோகிக்கப்படும் இலவச உணவுகளைப் பெறுவதற்காக மக்கள் ஒருவரையொருவர் அடித்துக்கொள்ளும் நிகழ்வுகள் அரங்கேறிக்கொண்டிருக்கின்றன. பலர் வேலையை இழந்துள்ளதுடன், வறுமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். உலக நாடுகளிடம் கடன் பெற்று அங்கு அரசு செயற்பட்டுக்கொண்டிருக்கிறது.

இந்நிலையில், தலைநகர் இஸ்லாமாபாத் மற்றும் கராச்சி, லாகூர் உட்பட முக்கிய நகரங்கள் மின்சாரம் இல்லாமல் தத்தளிக்கின்றன.

மின்தடையால் பல மின்சார ரயில்கள் பாதி வழியில் நின்றுவிட்டதாகவும், மேம்பாலத்தில் இயக்கப்பட்ட ரயில்களிலிருந்து பயணிகள் இறங்கி நடந்து செல்லும் விடியோக்களும் ட்விட்டரில் வெளியாகி வருகின்றன.

நாட்டில் மின்சார விநியோக முறை சீர்குலைந்த காரணத்தால், தலைநகர் உட்பட பல முக்கிய நகரங்கள் திங்கட்கிழமை காலைமுதல் மின்சாரம் இல்லாமல் இருப்பதாக நாட்டின் எரிசக்தித் துறை தெரிவித்துள்ளது.

நாட்டின் மின் தேவையில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டு, மின் விநியோகம் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், இதனால் நாடு முழுவதும் மின் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

நேற்றுக் காலை 7.34 மணிக்கு இந்தச் சிக்கல் நேரிட்டதாகவும், இதனால், நாடு முழுவதும் மின்சார விநியோகம் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், விரைவாக இதனை சரிசெய்யும் பணிகள் நடைபெற்று வருவதாகவும், எனினும், 12 மணிநேரம் ஆகலாம் என்றும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனால், லாகூர், இஸ்லாமாபாத், கராச்சி, பெஷாவர், குவெட்டா உள்ளிட்ட பல முக்கிய நகரங்களிலும், பலோசிஸ்தானின் 22 மாவட்டங்களும் இருளில் மூழ்கியுள்ளன. மின்சாரம் துண்டிக்கப்பட்டு, பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

## மே 6இல்...

# மன்னர் சார்ள்ஸின் முடிசூட்டு விழா



பிரித்தானிய மன்னர் 3ஆம் சார்ள்ஸின் முடிசூட்டு விழா ஊர்வலங்களுடன் 3 நாட்கள் நடைபெறும். இதையொட்டி பொதுநலவாய நாடுகள் முழுவதும் கொண்டாட்டங்கள் இடம்பெறும் என பெக்கிங்ஹாம் அரண்மனை அறிவித்துள்ளது.

பிரித்தானியாவில் நீண்டநாட்கள் ராணியாக இருந்த ராணி 2ஆம் எலிசபெத் கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் காலமானார். இதையடுத்து அவரது 74 வயது மகன் சார்ள்ஸ், பிரித்தானிய மன்னராக பொறுப்பேற்றுக்கொண்டார். இந்நிலையில், அவரது முடிசூட்டு விழா குறித்து பெக்கிங்ஹாம் அரண்மனை புதிய அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

3ஆம் சார்ள்ஸ் மன்னரின் முடிசூட்டு விழா எதிர்வரும் மே மாதம் 6ஆம் திகதி முறைப்படி நடைபெறவுள்ளது. சார்ள்ஸும், அவரது மனைவி கெமீலாவும் லண்டன் வெஸ்ட்மின்ஸ்டர் அபேயில் முறைப்படி பதவியேற்று கொள்வர். மன்னர் சார்ள்ஸின் முடிசூட்டு விழாவையொட்டி பொதுநலவாய நாடுகளில் 3 நாட்களுக்கு ஊர்வலங்களுடன் கொண்டாட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மே 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, வின்ட்சர் கோட்டை மைதானத்தில், 'தேசத்தை மிளிரச் செய்வோம்' என்ற கருப்பெருளில், உலகப் புகழ்பெற்ற கலைஞர்கள் பங்கேற்கும் பாரம்பரிய இசை, நடன, கண்கவர் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும். இவை நேரடி ஒளிபரப்பு செய்யப்படும்.

இந்த தனித்துவமான வரலாற்று நிகழ்வு கொண்டாட்டங்களுக்கு உலகம் முழுவதுமிருந்து ஏராளமானோர் வருகை தருவார்களென எதிர்பார்க்கிறோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஒரு மாணவனுக்காக இயங்கும் பாடசாலை



மகாராஷ்டிரா மாநிலம் கணேஷ்புர் கிராமத்தில் ஒரேயொரு மாணவனுக்காக பாடசாலையொன்று இயங்கிவருகிறது.

150 பேர் வாழும் கணேஷ்புர் என்ற சிறிய கிராமத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக ஒரேயொரு மாணவன் மட்டும் பாடசாலைக்குச் செல்கிறான். அந்தப் பாடசாலையில் கிஷோர் என்று ஒரேயொரு ஆசிரியர் நியமிக்கப்பட்டு மாணவனுக்கு அனைத்துப் பாடங்களையும் கற்றுக் கொடுக்கிறார்.

அரச பாடசாலைகளில் வழங்கப்படும் மதிய உணவு அந்த ஒரு மாணவனுக்கும் கொண்டுவரப்படுகிறது.



பிலிப்பைன்ஸின் சீன பாரம்பரிய லூனார் புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் களைகட்டியுள்ள நிலையில் மணிலா வீதியில் தனது எஜமானருடன் 'மாஸ்க்' அணிந்தபடி மாஸாக உலா வந்த நாய்கள்....

## அமெரிக்க ஜனாதிபதி வீட்டில் நீதித்துறை சோதனை:

# சிக்கும் இரகசிய ஆவணங்கள்; சிக்கலில் ஜோ பைடன்



அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் இல்லத்தில் நீதித்துறை அதிகாரிகள் நடத்திய சோதனையில் மேலும் 6 இரகசிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

ஜோ பைடன் தொடர்பான இடங்களில் இதற்குமுன் 3 முறை சோதனை நடைபெற்றபோது 10இற்கும் மேற்பட்ட இரகசிய ஆவணங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

பைடன் துணை ஜனாதிபதியாகப் பதவிவகித்த காலகட்டத்தைச் சேர்ந்த இரகசிய ஆவணங்கள் அவரது இல்லத்தில் கண்டுபிடிக்கப்பட்டது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

இந்நிலையில், வெள்ளிக்கிழமை இரவு, டெலவேர் மாநிலத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்ற சோதனையில், 1973 ஆம் ஆண்டுமுதல் 2009ஆம் ஆண்டுவரை, செனட் சபை உறுப்பினராக அவர் பதவிவகித்த காலகட்டத்தைச் சேர்ந்த 6 இரகசிய ஆவணங்கள் சிக்கியுள்ளன.

## குர்ஆன் எரிப்பு விவகாரம்

# துருக்கி போராட்டத்தில் சுவீடன் தேசியக் கொடி எரிப்பு



சுவீடனில் திருக்குர்ஆன் எரிக்கப்பட்டதைக் கண்டித்து துருக்கியில் நடைபெற்ற போராட்டத்தில் சுவீடன் தேசியக் கொடி எரிக்கப்பட்டது.

ஆபிரிக்க நாடுகளிலிருந்து சுவீடனில் தஞ்சமடைய வரும் இஸ்லாமியர்களைக் கண்டித்து, அந்நாட்டின் தீவிர வலதுசாரிக் கட்சித் தலைவர் ஒருவர் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் திருக்குர்ஆன் எரிக்கப்பட்டது.

இதனைக் கண்டித்து துருக்கியின் இஸ்தான்புல், அங்காரா நகரங்களிலுள்ள சுவீடன் தூதரகத்தின் முன் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. நேட்டோ அமைப்பில் சேர்வது தொடர்பாக துருக்கி வரவிருந்த சுவீடன் வெளியுறவுத்துறை அமைச்சரின் சுற்றுப்பயணத்தையும் துருக்கி அரசு இரத்து செய்துள்ளது.

# அமெரிக்காவுக்கு எதிராக உருவாகும் புதிய இராணுவ கூட்டமைப்பு



''உக்ரைன் போரில் ரஷ்யாவுக்கு பின்னடைவு ஏற்பட்டால், அணு ஆயுதத்தைப் பயன்படுத்த ரஷ்யா தயங்காது. அத்தோடு, அமெரிக்காவுக்கு எதிரான நாடுகள் இணைந்து, நேட்டோ அமைப்பைப்போல புதிய இராணுவ கூட்டமைப்பை உருவாக்கக்கூடும்.'' - இவ்வாறு ரஷ்ய அமைச்சர் மெட்வடேவ் எச்சரித்துள்ளார்.

உக்ரைன், ரஷ்யா இடையேயான போரில் உக்ரைனுக்கு நேட்டோ அமைப்பிலுள்ள நாடுகள் உதவி வருகின்றன. இதற்கு அமெரிக்காவும் ஆதரவளித்து வருகிறது.

இதை சுட்டிக்காட்டிய முன்னாள் ஜனாதிபதியும், தற்போது அமைச்சராக இருப்பவருமான டிமிட்ரி மெட்வடேவ், அமெரிக்காவால் துன்புறுத்தப்பட்ட நாடுகள் நேட்டோவை போன்று இராணுவக் கூட்டமைப்பை ஏற்படுத்த வாய்ப்புள்ளது என்றும் உக்ரைன் போரில் ரஷ்யாவுக்குப் பின்னடைவு ஏற்பட்டால், அணு ஆயுதத்தைப் பயன்படுத்த தங்கள் நாடு தயங்காது என்றும் தெரிவித்தார்.

# சிரியாவில் 5 மாடி குடியிருப்புக் கட்டடம் இடிந்து வீழ்ந்து 16 பேர் பரிதாபப் பலி



சிரியாவில் போரில் சேதமடைந்த அலெப்போ பகுதியில் 5 மாடி குடியிருப்புக் கட்டடம் இடிந்து வீழ்ந்ததில், 16 பேர் உயிரிழந்துள்ளதுடன் பலர் படுகாயமடைந்துள்ளனர்.

அலெப்போ, ஷேக் மக்சூத் மாவட்டத்திலுள்ள குடியிருப்புக் கட்டடம் திடீரென நேற்றுமுன்தினம் இடிந்து வீழ்ந்தது. தகவலறிந்து வந்த மீட்புப் படையினர், இடிபாடுகளில் சிக்கி இருந்தவர்களை மீட்டு அருகிலுள்ள வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்தனர்.

மேலும், பலர் இடிபாடுகளில் சிக்கியிருக்கலாம் என அஞ்சப்படுவதால் தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

கட்டடத்திற்கு அடியில் ஏற்பட்ட நீர்க்கசிவு காரணமாக பலவீனமாகி கட்டடம் இடிந்து வீழ்ந்திருக்கலாம் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7